தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 மேழம் 4 (17 - 4 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 16 | பகுதி 22-23

★ பெரியார் மாவட்ட உ. த. மு. க. அமைப்பு மாநாடு சிறப்பாக நடைபெற்றது!

★ முழு மாநாட்டு நிகழ்ச்சியிலும் பாவலரேறு தலைமையேற்றுப் பங்கு கொண்டார்!

(நம் சிறப்புச் செய்தியாளர்)

ஈரோடு, ஏப். 10— ஏற்கனவே அறிவிக்கப் பெற்றபடி. தி. பி. 2014 மீனம்.27 (10-4-83)—ஆம் பக்கல் ஈரோடு பிரப் சாலையில் உள்ள என். எம். எசு. கலையரங்கில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பெரியார்மாவட்ட அமைப்பு மாநாடு **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில், காலை 10 மணி முதல் இரவு 12 மணி வரையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இடையில் பகலுணவிற்கென 2-00 மணி முதல் 3-30 வரை இடைவேளை விடப்பெற்றது.

தமிழரின் தன்மான நலங் கருதும் இப்பேரியக்கத்தின் இம்மாவட்ட அமைப்பு மாநாட்டில், நினைவுக்கலையேந்தல் திருக்குறள் பெ. இராமையா அவர்களின் பதின்கவனக நிகழ்ச்சியும், பட்டிமன்றமும், கருத்தரங்கமும் ஏற்பாடு செய்தபடி மிகச் சிறப்பாக நடைபெற்றன.

ஈரோட்டில் கடந்த ஏழு எட்டு நாட்களாகவே மாரியம்மன் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்ததால், நகரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. உள்ளூர் மக்களும் வெளியூர் மக்களும் நகரில் உள்ள அனைத்துச் சாலைகளிலும் எந்நேரமும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தனர். தெருவுக்குத் தெரு, மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலி பெருக்கிகள் காதைத் தொலைத்தன இயல்பாக உள்ள கடைகள் தவிர, தெருவோரங்களிலும், புதிதாகப் போடப்பட்ட பந்தல்களிலும், பல்வகை அழகுப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், வீட்டுக்கு வேண்டிய தட்டுமுட்டுப் பொருள்கள், துணிமணிகள் முதலியவைகள் ஏராளமாக குவிக்கப் பெற்றிருந்தன. இருப்பினும் இவற்றினூடே, நம உ. த. மு. க. மாநாடு நடைபெற்ற பிரப் சாலை கழகக் கொடித் தோரணங்களால் அழகுடன் காட்சியளித்தது. மாநாடு நடைபெற்ற அரங்கு முழுவதும், கொடித் தோரணங்களாலும், பல்வகைப் புனைவுகளாலும் அழகுபடுத்தப் பெற்றிருந்தது.

காலை 10 மணியளவில், பாவலரேறு அவர்கள் பெரியார் தலைமைமருத்துவமனைக் கருகில் உள்ள முக்கூட்டுச் சாலையின் ஓரத்தில் நிலையாக நடப்பட்டிருந்த நீண்ட கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்து விட்டு, மாநாட்டு அரங்கத்திற்கு அழைத்து வரப்பெற்றார்.

மாநாடு தென்மொழி. நா. இளமாறன் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. பாவலரேறு அவர்களைத் தலைமையேற்கு மாறு பாவேந்தர். அ. இராமலிங்கனார், (பெரியார் மாவட்ட அமைப்பாளர்) முன்மொழிந்தார். அவரைத் தொடர்ந்து, புலவர் பொதிகைச் செல்வன், (பவானி வட்டத் தலைவர்), நா. இளமாறன் (தலைமையகச் செயற் குழு உறுப்பினர்), கா இளமுருகன், க. மு. (செயலர். மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.) புலவர். குமாரசாமி. (தாரை வட்டச் செயலர்.), புலவர். இரா. வடிவேலனார் (தாராபுரம்), பேரா. அரங்கச் செல்வனார் க, மு. (கோபி வட்டத் தலைவர்.) ஆகியோார் தலைவரை வழிமொழிந்து உரையாற்றினர். அதன்பின் ஈரோடு வட்டத் தலைவர் புலவர். தி. மு. அரசமாணிக்கனார் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

அவருக்குப் பின் தலைவர், பாவலரேறு அவர்களின் முன்னுரைக்குப் பின், தமிழினத் தலைவர்கள் திருவள்ளுவர், பெரியார், திரு. வி. க., பாவேந்தர், பாவாணர் ஆகியோர் உருவப் படங்களை முறையே திருவாளர்கள் ம்வலா. அரசமாணிக்கனார் (ஆசிரியர், குறளியம்), புலவர். தா. ஆறுமுகனார் க.மு, தென்மொழி. க. தமிழப்பன் (ஆசிரியர், பைந்தமிழ்') ஆகியோர் திறந்து வைத்து உரையாற்றினர். பின்னர் பாவலரேறு அவர்களின் உணர்வும் அறிவும் நிறைந்த முடிவுரை நிகழ்ந்தது. பகல் மணி 2-க்கு, திரு நிலா. வேங்கடவன், (ஈரோடு வட்டப் பொருளர்) அவர்களின் நன்றியுரைக்குப் பின் முற்பகல் நிகழ்ச்சி நிறைவுற்றது.

பிற்பகல் 3-30 மணியளவில் திருக்குறள் பெ. இராமையா அவர்களின் பதின்கவனக நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்னர் கருத்தரங்கம் நடைபெற்றது. திருவாளர்கள் கு. ச. ஆனந்தன், நா. சேதுபதி க.மு,, பேரா. கு. வெ. கி. ஆசான், த. விசுவநாதன், செல்வி. அ அருள்மொழி, செ. அரங்கராசன், ஈவேந்தன் ஆகியோர் கருத்தரங்கில் கலந்துகொண்டு, உரையாற்றினர். அதைத் தொடர்ந்து நகைச்சுவையரசு புலவர். தா. ஆறுமுகனார் க.மு. அவர்கள் தலைமையில் 'இராவண காவியத்தில் விஞ்சி நிற்பது மொழி உணர்வா, இன உணர்வா' என்னும் தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. திருவாளர்கள் பொதிகைச் செல்வன், பேரா. கா. அரங்கச் செல்வனார் க.மு., புலவர். சி. முத்துசாமி க. மு., பாவலர் சின்னப்பனார், புலவர். ப. அ. அரங்கநாதன் க. மு., புலவர். அ. பொன்னுச்சாமி, க.மு., ஆகியோர் கலந்துகொண்டு உரையாடினர். இறுதியில் நடுவர் 'இன உணர்வே' என்று தீர்ப்பளித்தார். அதன் பின்னர் ஏறத்தாழ இரண்டு மணிநேரம் பாவலரேறு அவர்களின், சிறப்புரை நடைபெற்றது. பாவேந்தர் அ. இராமலிங்கம் அவர்களின் நன்றியுரைக்குப்பின் மாநாடு இனிதே நிறைவுற்றது. மாநாட்டின் அனைத்துச் சிறப்புக்கும், **பாவேந்தர் அ. இராமலிங்கம்,** (மாவட்டச் செயலர்) புலவர். **தி. மு. அரசமாணிக்கனார்** (ஈரோடு வட்டச் செயலர்) ஆகிய இருவரே முழுக் கரணியமும் ஆவார்கள். அவர்களின் இடைவிடா உழைப்பும், ஆர்வமும் அனைவரையும் வியப்பும் மகிழ்ச்சியும் கொள்ளச்செய்தன. அவர்களுடன் ஒத்துழைப்புத் தந்தவர்கள் திருவாளர்கள். திரு. பேரா. உ. பாலசுப்பிரமணியம் க.மு., நிலா வேங்கடவன், தமிழப்பன், நா. இளமாறன், ஆகியோர் ஆவர். பாவலரேறு அவர்களுடன் தலைமையகத்திலிருந்து வட சென்னை மாவட்டத் தலைவர் திரு. **தென்மொழி ப. முருகவேள்** அவர்களும் மாநாட்டுக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. விரிவான முழுச்செய்தியும் பின்னர் வரும்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

பொருளாளுமை போன்றே அறிவாளுமையும் இருக்கக் கூடாது!

சமயம் என்ற பெயராலே ஓர் இனம் தமிழினத்தை ஆளுமை செய்வதா ?

நாட்டில் எங்கு பார்த்தாலும், எந்தத் துறையிலும் சுரண்டல் - எப்படிப் பொதுவுடமை வரும் ?

தமிழ்நிலம் வெளியீட்டு விழாவில்

பாவலரேறு உரையின் 8-ஆம் தொடர்!

இந்த நாட்டு அமைச்சர்கள் கவனிக்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் வேறு என்ன வேலை? நாட்டைக் காப்பதாக இருந்தால் காக்கிறதைக் கவனிக்க வேண்டும். உண்மையான காவலர்கள், நம்மவர்கள் தாம்! உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் காவலர்கள்! அவர்கள் அணிவதும் சிவப்பு! நாங்கள் அணிவதும் சிவப்பு!

இந்த நிலையை நீங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது அவரைப் (அறிஞர் அப்பாத்துரையாரைப்) பாருங்கள்! அவருடைய அறிவு எட்டிப் பரந்துபட்ட அறிவு! படித்தார். அவருடைய அறிவு எதற்கும் பயன்படவில்லையே! அறிவு அது பிறந்த இனத்துக்குப் பயன்பட வேண்டும். ஒரு குடும்பத்தில் பிறக்கிற மக்கள் உலகத்திற்குப் பயன்பட வேண்டும் என்று சொன்ன அறிஞர்கள் பிறந்த நாடு இந்த நாடு! ''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை''. தன்னுடைய தந்தைக்குப் பயன்பட வேண்டும்; தாய்க்குப் பயன்பட வேண்டும் என்று அவர் (திருவள்ளுவர்) சொல்லவில்லை; ''இந்த மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது'' என்று சொல்கிறார்! எவ்வளவு பரந்துபட்ட உள்ளம்! அறிவையே பொதுவுடைமையாக்கியவன் தமிழன் தான்!

இப்பொழுது நீங்கள் பொதுவுடைமைக் கட்சிகளைப் பார்த்தீர்களானால், சில நேரங்களில், சில இடங்களில் பார்க்கிறேன்! உலகத்தையே வளப்படுத்திய திருத்திய மூன்று அறிஞர்கள் என்று போட்டு, மார்க்சு, இலெனின், ஏங்கல்சு என்று போட்டு வைத்திருக்கிறான். என்னையா? அறிவுகூட ஒரே நாட்டிலே தானா விளைகிறது! அறிவு வல்லாண்மை இருக்கக் கூடாது! எப்படிப் பொருள் வல்லாண்மை இருக்கக் கூடாதோ அதே போல் அறிவு வல்லாண்மையும் இருக்கக் கூடாது! அறிவிலே ''சர்வாதிகாரம்'' கூடாது. ஓர் அறிவு, ஒரே நாட்டிலே, ஒரே ஆளிடமா தோன்றுகிறது? எத்தனையோ நாடுகளில் எத்தனையோ அறிஞர்களிடமிருந்து தோன்றியிருக்கும்!

உலகத்தையே ஆட்டிப் படைக்கின்ற அறிவு இந்த மூன்று பேரிடத்திலே தான் தோன்றியிருக்கிறது என்று சொன்னால், அது என்ன இழிவு! அது, மாந்த இனத்தையே இழிவுபடுத்துகிறதல்லவா? நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்! பொதுவுடைமைக்காரர்களை நான் குறைத்து மதிப்பிடுவதாகக் கொள்ளக் கூடாது. கட்சிக்காரர்கள் என்றால் நீங்கள் நினைக்கிறது வேறு; நாங்கள் நினைக்கிறது வேறு! கொள்கை என்று சொன்னால் நீங்கள் நினைக்கிறது வேறு; நாங்கள் நினைக்கிறது வேறு! அறிவு என்று சொன்னால் நீங்கள் நினைக்கிறது வேறு; நாங்கள் நினைக்கிறது வேறு!

சங்கராச்சாரியார் தாம் இன்றைக்கு இந்தியாவிலே பெரிய அறிஞர்! நான் சொல்லவில்லை; இந்திரா காந்தி சொல்கிறார்கள்! ஏன்? சீரிரங்கக் கோபுரம் கட்டப்பட வேண்டுமாம்! ஆறு, ஏழு, கோபுரங்கள் அப்படியே இடிந்து, பழுதுபட்டுக் கிடக்கின்றன. உடனே மிகக் கவலை! சங்கராச்சாரியாருக்கு! இத்தனையாயிரம் தெருக்களிலே, சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாமல், தண்ணீர் கூட இல்லாமல் குழாயிலே பார்த்தால் தண்ணீர் வராது; அதற்கு வேறே ... தண்ணீர் வருகிறதற்கு என்ன அடிப்படையான காரணியம்,... ஏரியிலே தண்ணீர் இல்லையா? இல்லை! வேறு ஏதாவது கிணறு வெட்டவில்லையா? அதுவும் இல்லை! பின் என்ன காரணியம் என்று சொன்னால், இவன் போய்க் கேட்கிறான்! ''தண்ணீரைக் கொடு; மழையைக் கொடு! மழையைக் கொடு!'' என்று, ''பிடில்'' (கின்னரம்) வாசிக்கிறான் ஒருவன்! (வலுத்த சிரிப்பு) மகாபாரதத்தில் இருக்கிற 'வருஷ பர்வத'த்தை அப்படியே எடுத்துச் சொன்னால், மழை வரும்! என்கின்றான்! மழைக் காலமாகப் பார்த்து, (சிரிப்பு) கடைசியிலே மழை பெய்கிறபோது, ''நான்'' ''பிடில் வாசித்தேன்; அப்பொழுது தான் மழை வந்தது'' என்கிறான்! என்னையா, இது வேடிக்கை! ஐப்பசி மாதத்திலே மழை வராதா? ''ஐப்பசி மாதத்து மழை அடை மழை!'' என்று எல்லோரும் தானே சொல்கிறார்கள்! எவ்வளவு ஏமாற்று நடக்கிறது, அறிவியல் வளர்ச்சி பெற்ற இந்தக் காலத்திலே!

இந்த நாட்டிலே சமயம் என்கின்ற பேரால் ஓர் இனம் எவ்வளவு ஆளுமை செய்கிறது! எண்ணிப் பார்க்க வேண்டும்! இதைப் பற்றியெல்லாம் நாம் சிந்திக்கிறோமா? இல்லையே! ஏதோ குருட்டுத்தனமாக நாம் ஏதாவது அது, இது, கட்சி, கிட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, எந்த வகையிலே நம்முடைய அறிவு மழுங்க அடிக்கப்படுகிறது; உரிமை தகர்க்கப்படுகிறது. பேசுவதற்குக் கூட நமக்குத் தடை செய்யப்படுகிறது இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே, பெரியோர்களே! இந்த இயக்கம் ஒன்று தேவை! அது எந்த இயக்கமோ தமிழியக்கம் என்றே வைத்துக் கொள்ளுங்கள்! அல்லது தமிழின முன்னேற்றக் கழகம் என்றே வைத்துக் கொள்ளுங்கள்! அல்லது உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்றோ, அல்லது திருக்குறள் கழகம் என்றோ வைத்துக் கொள்ளுங்கள்! ஏதோ ஒரு பெயரிலே நாம் இயங்கியாக வேண்டும்! அது எங்கள் கழகம், உங்கள் கழகம் என்று இல்லை! நீங்கள் நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும்! ஏதோ ஒரு பெயர் வேண்டும்; யாரோ ஒருவர் தொடங்கவேண்டும்! ஒருவர் வண்டி கட்ட வேண்டும்; எல்லோரும் ஏறிக் கொண்டு போக வேண்டும். அது யாராக இருந்தால் என்ன? நீங்கள் தான் கட்டுங்கள்; நான் வருகிறேன் ஏறிக் கொண்டு போவதற்கு. என்னையும் ஏற்றிக்கொண்டு செல்லுங்கள்!

நாம் இதெல்லாம் வெறும் ஆராய்ச்சிபண்ணிக்கொண்டு இருக்கக் கூடாது. இதைத் ''உள் வீழ்தல்'' என்று வள்ளுவர் சொல்கிறார்! உள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி நடை குடி! உள் வீழ்தல் என்பது உள் அழிவு. இன்னுஞ் சொன்னால், ''அகப்பகை''? என்பதே இந்த தமிழினத்துக்குத் தான் இருக்கிறது. வேறு எந்த இனமும் தன் இனத்தையே பகைத்துக் கொண்டதாக, எங்கேயும் பார்க்க முடியாது!

தன் இனத்தவர்களையே பகைத்துக்கொண்ட இனத்தை வேறு எங்கேயாவது நீங்கள் பார்க்க முடியுமா? எனவே எண்ணிப்பார்த்துத் தான் நாம என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

எங்கள் இயக்கத்தின் அடுத்த கொள்கை, இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்'. அரசியல் என்பது எப்படி இருக்கிறது? நன்றாகத் தெரியும்!' நம் நாட்டிலே, அரசியல் என்றால் எப்படிப்பட்டதற்கெல்லாம் அறம் வகுத்து, சட்ட திட்டங்கள் வகுத்து, அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கே ஒழுங்கான ஒரு நூல் ஈராயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே திருக்குறள் தோன்றியது தமிழினத்திலே என்று சொன்னால், இன்றைக்கு அரசியல் எப்படி இருக்கிறது? அரசியல் என்றால் இப்படித்தான் இருக்கும், என்று சொல்கிறான்!

காட்டு விலங்காண்டிக் காலத்திலே, புழு, புச்சிகளாக இருந்தது போலவே இருக்கலாமே! குடியரசு எதற்கு? முடியரசே ஏற்படுத்தி விடலாமே! இதற்காகவா, முடியரசைப் போக்கினோம்? இத்தனை நாடுகளாக, 56 நாடுகளையும் ஒரே நாடாக ஆக்கி, குடியரசு நாடு என்று பெயர் வைத்தோம்! மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டாமா?

பள்ளிக் கூடத்திலே போய் இடம் வாங்க முடிகிறதா, இந்த நாட்டிலே! எங்கேயாவது? பள்ளியிறுதி வகுப்புப் படித்து விட்டு, கல்லூரியிலே சேருகிற மாணவன் எவ்வளவு தொல்லைப்படுகிறான்! பத்தாயிரம் உருவா; இருபதாயிரம் உருவா! ஒரு சிறிய படிப்புக்கே! மருத்துவப் படிப்பென்றால் நாற்பதாயிரம், பொறியியல் படிப்பென்றால் ஐம்பதாயிரம்! யாரெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு போய், பணம் கொடுக்கிறானோ, அவனெல்லாம் படிக்கலாம்! அதற்குப் பின்னாலே, அவனும் சேர்ந்து கொள்ளையடிக்கலாம்!

ஆக, மக்கள் சுரண்டப்படுகிறார்கள்! யாராலே? — அறிவுள்ளவர்களாலே யாராலே? — இந்த இனத்தினாலேயே! யாராலே சுரண்டப்படுகிறார்கள்? கலைஞர்கள் என்ற பெயராலே இருப்பவர்களாலே, சுரண்டப்படுகிறார்கள்! அமைச்சர்களாலே சுரண்டப்படுகிறார்கள் செய்தித்தாள்களாலே சுரண்டப்படுகிறார்கள்! எப்படி இந்த நாட்டிலே பொது வுடைமை வரும் ?

நம்முடைய உண்மையான தோழர் வள்ளுவன் (மார்க்சிய — இலெனினியப் போராளி) அவர்கள் இருக்க வேண்டும்! எதற்கு நான் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், பொதுவுடைமை உணர்ச்சி இந்த நாட்டிலே பரவ வேண்டும், பொதுவுடைமை மலரவேண்டும் என்பதிலே யாரையும் விட, இவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு! மிகுந்த ஈடுபாடு! ஐயோ, ஏழைகளா? தொல்லைப்படுகின்றார்களே, துன்பப்படுகிறார்களே, அவர்கள் பிழைப்பதற்கு வழியில்லையே, இப்படி ஒருவன் இருக்கிறபொழுது, இப்படியொருவன் பெரிய செல்வகை, கோடி கோடியாகத் திரட்டிக்கொண்டு வாழ்கிறானே, திருடிக் கொண்டு வாழ்கிறானே என்ற அந்த மனவுணர்வு புழுங்குகிற உறுத்துகிற அந்த உணர்வு அவர்களுக்கு மிகுதியாக இருக்கிறது! நமக்கெல்லாம் ஒன்றும் இல்லை! ஒரு சின்ன உணர்வுகூட நமக்குக் கிடையாது. ஏழையைப் பார்த்து நாம் கண்ணீர் வடிக்கிறோமா? இல்லையே! வருத்தப்படுகிறோமா? இல்லையே! ஏதோ, தமிழ் என்று சொல்லிக் கொள்கிறோம்! நான் கூட! ஏழையைப் பார்த்து நமக்கு வருத்தம் வர வேண்டும்!

எனவே, அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன். யார் சுரண்டுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். செல்வர்கள் மட்டுமே இந்த நாட்டில் சுரண்டவில்லை! கலைகள் என்ற பெயராலே கலைஞர்கள் சுரண்டுகிறார்கள். ஒருவன் ஒரு படத்திலே நடிப்பதற்கு எத்தனை இலக்கம்? இப்பொழுது எப்படி ஒருவன் கிடந்தான்: வயிற்றிலே குத்துப்பட்டுக் கிடந்தானே! அவனுக்கு • நூறு கோடி உருவா! அமிதா பச்சன்! நூறு கோடி உருவா முதல் போட்டு இருக்கிறார்களாம் அவனை நம்பி. ஓர் ஆளை நம்பி, நூறு கோடி உருவா முதலீடு போட்டு, ஒரு சின்ன

(7-ஆம் பக்கம் பார்க்க)

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 17-4-83 இதழ் எண்: 16 — பகுதி 21 22

தமிழாண்டுப் பிறப்பா? தமிழின அடிமைத்தனமா?

எதையும் ஆரியப்பார்ப்பனர்கள் தங்களுக்குச் சார்பானது என்றால், அதை வானளாவத் தூக்கிப் பேசுவார்கள்; நிலமளாவ விளம்பரப்படுத்தி விடுவார்கள். அ்து ஆரியர்களுக்கே வந்த கைத்திறனும், வாய்த்திறனும் ஆகும். ஆனால் இந்த ஏதுங்கெட்ட அடிமைத் தமிழனுக்குத்தான், ஓர் இழவும் விளங்காது; ஓர் இழப்பும் புரியாது. இடித்திடித்துக் கட்டுரை கூறினும் கண் விழியாமல், நெட்டுயிர்ப்போடுள்ள பிணம் போல இருப்பான்.

தமிழாண்டுப் பிறப்பாம்! அதன் பெயர் 'ருத்ரோத்காரி'யாம். உடனே வானொலி, தொலைக்காட்சி அல்லோல கல்லோலப்படுகின்றன. அரசுப் பணங்களை வாரி வீசிப் பங்கிட்டுக் கொண்டு, அந்த அறிவியல் கருவிகளால், மூடத்தனங்களையும், கேடுகெட்ட கருத்துகளையும், குடிகாரப் பாட்டு எழுதுவான்களைக் கொண்டும், காலந்தின்னிக் கழுதைகளைக் கொண்டும் அமைத்த கூத்தும் கொம்மாளமும் நடந்தன. செய்தித்தாள்களோ புத்தாண்டுச் சிறப்பிதழ்கள் என்னும் பெயரால், வழக்கம்போல் திரைப்படக் கூத்திகளைப் பலகோணங்களில் படம்பிடித்துப் போட்டு அவர்களிடம் கேள்வி கேட்கவும், விடை வாங்கிப் பக்கம் பக்கமாக வீணடித்து, இந்த நாட்டு மக்களின் மூளையையும் பணத்தையும் ஒரேநேரத்தில் சுரண்டுதல் வேலையைச் செய்து கொண்டன. வீணாய்ப்போன ஏதுங்கெட்ட அரசும் ஏழைகளுக்கு 'வேட்டி சேலை' கொடுப்பதுபோல் விளம்பர வெளிச்சம் போட்டு அரசியல் வாணிகத்தைத் திறம்படவே நடத்திக்கொண்டது. பாட்டுக் கட்டிகள் பல்லிளிப்போடும், உடல் நெளிப்போடும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பாடுகின்றார்கள், 'சித்திரைப் பெண்ணே! மழையைக் கொண்டு வா, வா, வா,—என்று.மக்களும் தாங்கள் எப்படி ஏமாற்றப்படுகிறோம், சுரண்டப்படுகிறோம் என்று அறியாமல் என்றும் போல் இளித்தவாய்த்தனத்தோடும், ஏழ்மைத் தன்மையோடும் கிடந்து சாகிறார்கள்.

தாங்கள் திராவிட இயக்கத் தலைவர்கள் என்றுகூறிக் கொள்ளும் இரண்டுங் கெட்டான்கள், தமிழ் ஆண்டு பிறந்துவிட்டதாம்; உடனே மக்களை நோக்கி, வாழ்த்து அறிக்கைகள்...கருத்துரைகள்... துடிதுடித்துக் கொண்டு வழங்க வந்துவிடுகிறார்கள். ஆரிய குலத் தலைவர் சிரி காஞ்சி காமகோடி பீடாதிபதியார்தாம், தம் ஆரியப் பழக்க வழக்கங்களை இன்னும் இந்த அறிவியல் வளர்ந்த காலத்திலும் கூட, இந்து மூட மக்கள் கடைப்பிடிக்கிறார்களே என்று உள்ளூர மகிழ்ந்து, தங்கள் புராண, இதிகாசப் புளுகுகள் மேலும் மேலும் வலுப்பெற்று மக்களைச் சூழ்ந்து, மூளைச்சலவை செய்யட்டும் என்று கருதி, 'செய்தி' விடுக்கிறார்கள்! இந்தத் திராவிடத் தலைவர்களும், அல்லது தமிழினத் தலைவர்கள் என்று தருக்கிக் கொள்ளும் ஓரிரண்டு உருவங்களும், புத்தாண்டு பிறந்தது என்று அறிக்கைகள், செய்திகள் விடுக்கிறார்களே, அ்தெல்லாம் எதற்கு? ஏன்? எப்படிப் புத்தாண்டு பிறந்தது? 'ருத்ரோத்காரி' ஆண்டாம்! இ்தென்ன வெட்கங்கெட்ட தன்மை? ஒருபுறம் ஆரியத்தை வீர, சூரத்தனமாக எதிர்ப்பது? மறுபுறம் ஆரியத்துக்கே அடிபணிவது அரசியல் தலைகளின் போலித்தனமான இந்தப் போக்கை மக்கள் எப்படி விளங்கிக் கொள்ள முடியும்? முதலில் இந்தச் சொல் மட்டு மன்று, இந்த வரிசையில் சொல்லப்படும் பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோற்பத்தி,ஆங்கிரஸ ஸ்ரீமுக, பவ, உவ, தாது— முதலிய 60 ஆண்டுப் பெயர்களும் தமிழா? தமிழ்ச் சொற்களா? இவை எப்படிப் பிறந்தன என்று நம் திராவிடப்பிள்ளைகளுக்குத் தெரியாதா, இவை நாரதருக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்த பிள்ளைகள் என்று? அந்த அருவருப்பான புராணக் கதையை இவர்கள் ஒப்புகிறார்களா? ஆண்டுப்பிறப்பு(வருஷப்பிறப்பு)என்பதன் பொருளே, அது நாரதா குழந்தை என்ற கதை மரபால்தானே வந்தது. மற்றப்படி ஆண்டுத் தொடக்கம் என்பதுதானே தமிழர் மரபு? இந்த உண்மைகள் தெரிந்துமா, 'ருத்ரோத்காரியை' நாம் வரவேற்பது? திரைப்படப் பாட்டுக்காரன்கள்தாம் 14-4-83 அன்று 'சித்திரை' முதல்நாளில் ஒலி, ஒளிபரப்புத் துறையையே நாறடித்து விழுங்கு விட்டான்கள்! காசுக்காக அவன்கள் எதையும் எடுத்து விழுங்கு வான்கள்! இந்தத் தலைவர்களுக்கு ஏன் இந்தத் தலையாட்டித்தனம்! தமிழை ஒழிப்பதும் தமிழரின் தனித்தன்மையை அழிப்பதுந் தானே ஆரியத்தின் தலையாய கொள்கை! அதன் அடிப்படையில் அமைந்தனதாமே இப்பொழுதுள்ள ஆண்டு வரிசைகளும்,மாத வரிசைகளும்!

இப்பொழுது வழங்கும் 60 ஆண்டுச் சுற்றுப் பெயர்கள் வரிசை சாலிவாகனனால் அல்லது கனிஷ்கனால் கி.பி. 78-இல் தான் ஏற்பட்டவை. (காஞ்சி கோடியார் வேண்டுமானால் இவை 'அநாதி' அ்தாவது, இந்த உலகம் தோன்றியபோதே இருந்தன என்பார்! அவாளுக்கே உரிய தோது அது). மேலும் இந்த அறுபது ஆண்டு வரிசை அறிவியலுக்கோ வரலாற்றுக்கோ பொருந்தி வருமா? எவராவது சொல்ல முடியுமா? துந்துபியில் நடந்தது; ருத்ரோத்காரியில் செத்தது என்றால், எந்தத் துந்துபி, எந்த ருத்ரோத்காரி என்று 500 ஆண்டுக்குப் பின்னால் உள்ள எவனாலாவது கண்டு சொல்ல முடியுமா? வேறு ஆண்டு வரிசைகளின் துணையை வைத்துத்தானே இதைக் கணக்கிடமுடியும்?

ஆரியர்கள் இந்நாட்டுக்கு வந்தவுடன் தங்கள் பிழைப்புக்காக இந்நாட்டில் தமிழர்கள் கொண்டிருந்த, அறிவியல், கலையியல், வாழ்வியல், மருத்துவவியல், வானியல் தொடர்பான அத்தனை அறிவு நூல்களையும் தங்கள் மொழியில் பெயர்த்துக்கொண்டு, மூலநூல்களை அனைத்தையும் அழித்து விட்டனர் என்று ஆரிய வரலாற்றாசிரியர்களே ஒப்புகின்றனர்.

மதி என்றால் அளவு. கால அளவைக் கணிக்க நிலவு உதவியதால் அதை மதி என்றனர். ஒரு முழுமதி (பௌர்ண்மி)க்கும் இன்னொரு முழுமதிக்கும் இடையில் உள்ள நாள் மாதம். இதை மாஸம் என்று பெயர்த்தனர் ஆரியர். வளர்பிறை நாட்களை ஒளிப்பக்கம் என்றும், தேய்பிறை நாட்களை இருட்பக்கம் என்றும் சிலப்பதிகாரம் (23:133) கூறும் அவற்றைத்தான் சுக்லபக்ஷம், என்றும் கிருஷ்ணபக்ஷம் என்றும் மொழிபெயர்த்தனர். எத்தனையாயிரம் சொற்களை எத்தனை நூறு துறைகளில் மொழிபெயர்த்துக் கொண்ட வரலாறு, சின்னவாளுக்காகட்டும், பெரியவாளுக்காகட்டும் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் திராவிடத் தலைவர்களுக்குத் தெரியாதா? பின் எதற்கு நாரதர் பெற்ற பிள்ளையாண்டை இவர் வரவேற்று அறிக்கை விடுகிறார். அந்த ஆண்டு வரிசையை இவ்வின நலங்கருதுவதாக முரசொலிக்கும் தலைவர்கள் ஒப்புகிறார்களா? 'ஓரை' என்னும் தூய தமிழ்சசொல்லே கிரேக்கத்தில்கூட 'ஹோரா' என்று வழங்குகிறது. தமிழில் வழங்கிய மாதப் பெயர்களாகிய ஓரைப் பெயர்களைத் தவிர்த்துவிட்டு, விண்மீன் பெயர்களான சைத்திரா, வைசாகா, ஜியேஷ்டா, ஆஷாட, சிராவணா, பாத்ரபத, ஆஸ்வயுஜ, கருத்திகா, ஆக்ரஹாயணா, அல்லது மார்க்கசிர,பௌஷ்ய,மாகா, பால்குணா என்பனதாமே சித்திரை, வைகாசி முதல் பங்குனி ஈறான மாதங்களாகக் கூறப்படுகின்றன. இவையெல்லாம் தமிழ்மாதப் பெயர்களா? தமிழர் ஓரைப் பெயர்களான மேழம் விடை, இரட்டை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம்—என்பவற்றைத் தாமே மாதப்பெயர்களாக வழங்கினர். இவற்றைத் தாமே பழஞ் சேரநாட்டவர் மரபினராகிய இன்றைய மலையாளியரும் வழங்குகின்றனர். இப்பெயர் மரபுகளை சூடாமணி நிகண்டு 64, 65, 66-ஆம் பாடல்களிலும் காணலாமே! 27 நாள்மீன் பெயர்கள் புரவி, அடுப்பு, ஆரல், சகடு, மான்றலை. மூதிரை, கழை, காற்குளம், என்ற வரிசையில் தூய தமிழிலன்றோ வழங்கியிருந்தன. (சூடாமணி நிகண்டு 67 முதல் 78-ஆம் பாடல்களைக் காண்க.) இன்று அவை அஸ்வினி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருக ரிஷம், திருவாதிரை, புணர்பூசம் பூசம் என்றபடியன்றோ மொழிபெயர்க்கப்பட்டு வழங்குகின்றன. கழகப் பாடல்களில் சுட்டப்பெற்றுள்ள சில விண்மீன் பெயர்களும் ஓரைப்பெயர்களும், மலையாளத்தில் வழங்கும் அப்பெயர்களும் தமிழர்களின் பண்டைய மரபையன்றோ நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றன.

இவையெல்லாம் நமக்கு விளக்கமில்லாதிருந்த காலத்தில் நாம் ஆரியன் சொன்னதை அப்படியே நம்பினோம். இன்று அறிவுக்கண் திறந்தபின்,அடிமையுணர்வு தவிர்ந்த பின்னுமா, ஆரியனின் ஆண்டு வழக்கையும், மாத வழக்கையும் நாம் பாராட்ட வேண்டும்? பின்பற்ற வேண்டும்? எண்ணிப்பார்க்க வேண்டாமா?

நமக்கென்று உள்ள மாதப்பெயர் வரிசைகளைப் பழந் தமிழ்மரபின் அடிப்படையில், ஓரைப்பெயர்களால் குறிக்கும் கருத்தையும், சுறவ (தை) மாதத்தில் தமிழாண்டு தொடங்கும் முறையையும், மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் கூறியபின், அவற்றை ஏற்றுக் கடந்த 25-ஆண்டுகளாகவே 'தென்மொழி' வழக்கப்படுத்தி வருகிறதே! இவ்வாறு தமிழினமரபு நிலைகளை. துறையறிஞர்கள் அறிந்துகூறியும், கண்டு காட்டியும், நடைமுறைப்படுத்தியும் வருகையில், எந்தத் தன்மானமுள்ள தமிழ்த் தலைவராகிலும் இவற்றைப் பின்பற்றினரா? ஆரிய இனத்தலைவர் சிரி காஞ்சி காமகோடியார் சொல்வதைத்தானே இந்த வகையில் இன்றுவரையில், இவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்! வரலாற்றறிவு அற்று ஆரியத்துக்கும் தேசியத்திற்கும் அடிமைகளாகின்றனர் என்றால், திராவிட அரத்தம் ஓடுவதாகத் திருவாய்கள் மலரும் தமிழினத் தலைவர்(!)களாகிலும் தங்களை ஆரிய அடிமைத்தனங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளக்கூடாதா? ஆரிய மரபை முதலில் மொழிநிலையில் கழற்றி விட்டாலன்றோ பிறஇன, அறிவுநிலைகளில் அதனை ஒழிக்கும் முயற்சி வெற்றிபெற முடியும்! 'ஆரியமாயை' இன்னும் தலைவர்களிடமே நீங்கவில்லையே! மக்களை எவ்வாறு குற்றம் கூறுவது?

மாத ஆண்டுப் பெயர்களை மட்டுமா அவன் சமசுகிருதத்தில் வழங்குகிறான். எத்தனை ஊர்ப்பெயர்கள்! எத்தனை தெய்வப் பெயர்கள்! எத்தனை மாந்தப் பெயர்கள்! எத்தனையெத்தனை மூலிகைப் பெயர்கள். நாம் சீரகம் எனறால் அவன் ஜீரக என்று சொன்னால்தானே அவன் தொண்டையில் எச்சில் இறங்கும். தாயுமானவன் என்று சொல்ல மாட்டானே; மாத்ருபூதம் என்றால்தானே அவன் தின்ன சோறு செரிக்கும். திருக்கழுக்குன்றம் என்று சொன்னால் அவன் நாக்கு சுளுக்கிக் கொள்ளாதா? பக்ஷித்தீர்த்தம் என்றால்தானே அந்த சுளுக்கு நீங்கும்! திருவானைக்கா என்றால் அவன் வாய் வெந்துவிடாதா? ஜம்புகேஸ்வரம் என்றால்தானே அதுவேகாமல் இருக்கும். இப்படி எண்ணிறந்த எடுத்துக்காட்டுகளையும் மலைமலையாகக் கூறியும் இன்னும் இந்த மூடத்தமிழன் நான் அவன் போட்ட மலத்தைத்தான் தின்பேன் என்னும்படி சமசுக்கிருத, புராண ஏற்புகளை மறைமுகமாகக் கொள்கிறான், அடிமையாய்க் குனிந்து காட்டுகிறான் என்றால் எங்கேபோய் முட்டிக் கொள்வது?

மொழியா—அது சமசுக்கிருதந்தான் மூலம்; கலையா—அ்து ஆரியந்தான் அடிப்படை; இசையா—அது சாமவேதத்திலிருந்துதான் வந்தது; இயலா—அதற்கு எங்கள் சாகித்தியங்கள்தாம் ஒளி கொடுத்தன; இலக்கணமா—அ்து எங்கள் பாணிய வியாகரணத்திற்குப் பின்னர்தான் தோன்றியது; கூத்தா—அது, எங்கள் பரதமுனிவரின் பரதநாட்டியத்தையே அடிப்படையாகக் கொண்டது; அறமா — அதற்கு எங்கள் மனுதர்மம் போன்ற நூல்களே மூலம்; பொருளா அதற்கு எங்கள் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமா கருத்துகளைத் தந்தது; காதலா, அல்லது காமமா-அதற்கு எங்கள் வாத்சாயனரின் அல்லது காமாந்தகரின் காமசூத்திரமே அடிப்படை மருத்துவமா — அதற்கு ஆயுர்வேதமும், சரகரிஷியின் சரகமும், தன்வந்திரியின் தான்வந்திரிகமும், சுஸ்ருதரின். சூஸ்ருதமுமே காரண நூல்கள்; வானியலா—அதற்கு எங்கள் ஆரிய பட்டரே தாத்தா; மெய்ப்பொருளியலா அஃதாவது தத்துவமா அதற்கு வேதாந்த, உபநிஷத்துகளே வித்துகள்— என்று எதையெடுத்துக் கொண்டாலும், ஆரியமே மூலம்,முதல் என்று காட்டுவதே அவர்களின் முதற்கொள்கை. தமிழனுக்கென்று ஒன்றுமே இல்லை; அஃது ஒரு காட்டுமிராண்டி மொழி; சூத்திர பாசை: நீச பாசை என்று காட்டுவதே அவர்கள் கருத்து. அதைத்தான் நாமும் இன்னமும் ஒப்புக் கொண்டபடி அவன் காலுக்குச் செருப்பாய்த் தேய்ந்து வருகிறோம்! எப்பொழுதுதான் நமக்கு மானம் வருமோ? அந்தக் காஞ்சி, காமகோடிச் சின்னப் பெரியவாளுக்குத்தான் வெளிச்சம்!

○

பிழை திருத்தம்!

இவ்விதழ் முதற்பக்கத்தில் உள்ள கீழ்வரும் பிழைகளைத் திருத்திப் படிக்கக்கேட்டு கொள்கிறோம். பத்தி.2. மேலிருந்து கீழ் 17- ஆம் வரி 'முதலியவைகள்' என்பதை 'முதலியவை' என்றும், பத்தி. 3. கீழிருந்து மேல் 16- ஆம் வரியில் 'வடிலேனார்' என்பதை 'வடிவேலனார்' என்றும், பத்தி .4. கீழிலிருந்து மேல், 9- ஆம் வரியில் 'ஈவேந்தன்' என்பதை 'ஈழவேந்தன்' என்றும், அதே பத்தி மேலிருந்து கீழ் 6- ஆம் வரியில் க. மு. என்பதன்பின், பேரா. மு. ச. சிவம் க. மு. புலவர் செ. ஆறுமுகனார் க. மு. என்னும் பெயர்களை இணைத்தும், பக்கம் 2-இல் தலைப்புவரி 6-இல் பொதுவுடமை' என்பதைப் 'பொதுவுடைமை' என்றும், பத்தி 1, இரண்டாம் பத்தி கீழிருந்து எழாம் வரியில் 'சொல்லவிலில' என்பதைச் 'சொல்லவில்லை' என்றும் அதை அடுத்த வரியில் 'மன்னுயிர்க்கெல்லாம் என்பதை 'மண்ணுயிர்க்கெல்லாம்' என்றும் திருத்திப் படித்துக் கொள்ளவும். பிழைக்கு வருந்துகிறோம்.

குனிந்த நிலையில் ஆழ்ந்து பார் - தமிழா!

— அண்ணேக்கி —

இன்ன இன்னவழி என்று சொல்லிவிட முடியாதபடி தமிழர் அடிமைச் சகதியுள் மடிந்து, புழுக்களாய் நெளிந்து கொண்டிருக்கிற நிலையில், அவர்களை அடிமைச் சேற்றிலேயே விட்டுவிட்டு மேலோட்டமாக அவர்கள் மீது விழும் தாக்கங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருப்பது அவர்களின் பழைய அடிமைத் தனத்தை மூடிமறைக்கும் நிலையே!

சாதி-மத சகதி, பொருளியல் ஏற்றத்தாழ்வு, அரசியல் வீழ்ச்சி, அறிவுத்தாக்கம், மொழியழிப்பு இப்படிப் பல துறைகளிலும் என்றும் எழும்பி-இவற்றையெல்லாம் தாக்கி எறிந்து சீரான நடைவிட முடியாத தமிழனின்—தமிழினத்தின் மீது இன்றைய அரசியல் புலனவுகள், நிரைப்படத் தாக்கங்கள், இதழ்களின் இழிநிலைகள் மேலும் மேலும் அவனின் புறநிலை எழுச்சியையும் சூம்பிவிடச் செய்துகொண்டிருக்கிற நிலை ஆகிய நச்சரவங்களால் செய்யப்படுவதுடன் அவற்றின் அடிமைகளாலும் வலித்தம் பெறுகின்றன.

பார்ப்பன வல்லூறுகளால் நடத்தப்படும் இழிவான இதழ்கள் ஒருபுறம் மதத்தையும், மறுபுறம் பாலியல் உணர்வையும் தூண்டிக்கொண்டிருந்த நிலை—இன்னும் வெளிப்படையாக இழிவான செய்திகள் அருவருப்புற்று வெளிப்படுத்தப்படுவதைப் பார்த்து-அவர்களுக்கு அடிமைகளாய் உள்ளோரும் வரிகள் போட்டு மகிழ்வித்துக் கொண்டிருக்கிற நிலை இனத்தையே அழிக்கும் என்பதை மறக்கின்றனர்.

மடிந்து கொண்டிருக்கிற நிலையில் உள்ள இனத்தை இப்படிப் போட்டி போட்டுக்கொண்டு ஏமாற்றிச் சுரண்டிப் பிழைக்கும் தன்மை பிராமணீயத்திற்கு எப்படி இயல்பாக போய்விட்டதோ, அதேபோல் பல்லிளிக்கும் தன்மையும் இயல்பாக போய்விட்டது தமிழினத்திற்கு!

'முழு அழிவை நோக்கிச் செல்லும் இனம் மிக விழ்த்தப்பட்டால்—ஒரு காலத்தில் உயிர்ப்பிக்கையில் அடிமைப்படுத்துபவன் கண்டுகொள்ளப் பெறுவான் என்பதை முன்னெச்சரிக்கையாக உணர்ந்தே உள்முகப் பார்ப்பனியத்தைக்கட்டிக் காத்து பணி செய்யும், தமிழினத்தின் அழிவுக்கு பார்ப்பனியத்தைத் தூண்டும் 'சோ'-தன் இதழில் மேலோட்டமாக தமிழினத்தை அழிவுறுத்தும் பார்ப்பனிய எழுத்தாளர்களைக் கண்டித்து, மக்களுக்கு அவர்கள் மேல் ஏற்படும் எதிர்ப்பு நிலையையும் தம்மினத்திற்கு ஆதரவாகப் பயன்படுத்தும் ஆழமான முயற்சியும் வேறு எந்த இனத்திலும், எந்த நாட்டிலும் நடைபெறவில்லை.

அனுராதா ரமணன், இந்துமதி, சிவசங்கரி போன்ற பார்ப்பனியக் கொழுந்துகள் கொழுப்பேறித் தாங்கள் உணர்ந்தவற்றையெல்லாம் கொட்டித் தீர்த்துத் தமிழ் மக்களை வாட்டி வதைக்கும், அல்லது கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் நிலை ஒருபுறம்—பார்ப்பனியத்திற்கு ஆக்கம்!

மணியன், சங்கராச்சாரி, 'இந்து' போன்ற பார்ப்பனியவேர்கள் மதம் எனும் பெயரில்—மக்களைச் செயலற்றவர்களாக மாற்றி—என்றைக்கும் விழித்தெழ முடியாமல் செய்வது மறுபுறமும்—பார்ப்பனியத்திற்கு ஆக்கம்!

திரையுலகில் உள்ள அனைத்துப் பார்ப்பனியத்தடியர்களும் கலை எனும் பெயரில் மக்களைச் சுரண்டி, அவர்களின் பாலுணர்வைத் தூண்டி பிற சிந்தனைகளை ஒழிக்கும் நிலை இன்னொருபுறம்—இதுவும் பார்ப்பனியத்திற்கு ஆக்கம்!

இவற்றிற்கெல்லாம் மேலாக இவர்கள் செய்வதெல்லாம் தவறு என்று ஒருசிலர் நினைப்பதையும் தம்பக்கம் தூக்கிப்போட்டுக் கொள்ளும் 'சோ' போன்ற ஆரியப்பார்ப்பன அடி மரங்களின் ஆழமான சிந்தனைவழி தமிழின அழிப்பு முயற்சியும்—பார்ப்பனியத்திற்கு ஆக்கம்!

ஆக தமிழன் அடிமை—அடிமைதான்!
அவன் விழித் தெழுவது கடினந்தான்!
உண்டுகொழுத்து உறங்கும், அரசியல்
ஏமாற்றிகளை நம்பிப் போகாமல் என்றைக்குத்தான்
தமிழன் தன்னிலை உணருவானோ?
குனிந்ததலை நிமிர்வானோ?

பட்டறிவு ஒரு பாட்டாகிறது!

எல்லாம் விற்று விட்டுப்
பட்டமொன்று வாங்கினான்.
ஒன்றிற்குத் துணையாகக்
'கற்பித்தல்' பட்டமும் பெற்றான்!
படியேறிப் 'படி' கட்டி
வேலையும் கிடைத்தது...
'கடமையைச் செய்...
உரிமைகள் உன் வாசலுக்கு வரும்'
என்ற 'கீதைப்பேருரை' படித்தவன்...
'அப்படி இப்படி' ஒரஞ்சாரம், பார்க்காமல்
நான்கு சுவர்க்குள் 'கற்பித்தான்'...
படித்துப் படித்துப் பட்டை தீட்டித் தீட்டிக்
கூர்மை யடைந்தது அவனது நாக்கு..
யார் எதிர்த்தாலும் 'கடமை'த் தெருக்குக்
கசடசல் வேலை செய்தான்...
அதில்...ஆளுமையும் மாட்டியது...
'கடமை' நெறியில் 'வெறி' நாய்களின்
பதவியைச் சீண்டினான்..
பதவிக்கு வாலாட்டும் எடுபிடிகள்...
அந்த வாலாட்டத்தை
ஆலவட்டமாக்கிக் கொண்ட
ஆளுமைக்கு, அவன்
முடிச்சானான்...முட்டுக்கட்டை யானான்;
விளைவு . சல்லி சல்லியான
இடையூறுகளைச் சந்தித்தான்...
விரிந்த உலகின் பரப்பினை
ஊசிமுனை ஓட்டைவழியே கண்டான்...
சிறுவிடுப்புக் கேட்டாலும்
பெருங் கடுப்புக் காட்டிய தாளாளர்;
வேலையிலிருந்து தடுக்கும் மேலாளர்களின்
பொய்க்கலையாக...
போலிகளாட்டம் கண்டபின்
போராட்டம் அன்றோ அவனைப்
புதிய ஆசிரியனாக்கிக் கொண்டுள்ளது!

— பறம்பை அறிவன்.

மலேசிய மடல்

நடுவணரசு ஆணைக்குழு ஆய்வு செய்யுமா?

அண்மையில் இந்திய நடுவணரசு, நடுவர் சக்கரியா ஆணைக்குழுவை அமர்த்தியுள்ளது. இக்குழு, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வாழும் நாடற்றுப் போனவர்களின் சிக்கல்களை ஆராயுமாறு பணிக்கப்பட்டுள்ளதாம். இக்குழு, நாடற்ற இந்தியக் குடிமரபினரின் வேண்டுகைகள் என சில முறையீடுகளை ஆய்வுசெய்வதோடு தம் பணி முடிந்துவிட்டது என முடிவு செய்துவிடாமல், இம் மூன்று நாட்டிற்கும் சென்று முழுமையான ஆய்வு செய்யவேண்டும். இலங்கையில் பத்து இலக்கமும், மலேசியா சிங்கப்பூரில் ஓர் இலக்கமும் நாடற்ற முறையில் குடியுரிமை வழங்கப்படாமல் ஒப்போலைஉரிமையிழந்து அல்லல் பட்டு வருகின்ற சிக்கல்கள் என்ன, ஏன், எவ்வாறு என்பதை ஆய்வு செய்வதற்கு இம் மூன்று நாடுகளில் உள்ள இந்தியத் தூதர்கள் புள்ளிவிளக்கங்களுடன் அவற்றை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவேண்டும் என நடுவணரசு ஆணைபிறப்பிக்க வேண்டும். தாய்நாட்டுக்குக் குடியுரிமையும், எல்லைக்கடவும் (பாசுபோர்ட்டும்) இல்லாத சிவப்பட்டைக்காரர்கள் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் எவ்வளவுபேர் எனக் கணக்கிட வேண்டும். பெரும்பாலான தமிழர்களான இவர்களின் சிக்கல் 37 ஆண்டுகளாகத் தொடர்சிக்கலாக இருப்பதால், தமிழக—புதுவை அரசுகள் இதில் அக்கறைகொண்டு விளக்கங்களைத் திரட்டி, நடுவணரசுக்கு முறையிட வேண்டும்.

மலேசியாவில் இப்போது குடியுரிமையற்றசிவப்பு அட்டையாளர்களுக்கு நிலவுரிமை. வீட்டுரிமை தடுக்கப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் நிலையான குடிகளாக இருந்த நாடற்றவர்களாகி உள்ளனர். 'சிஎன்ட்ரிபர்மிட்' என்ற நுழைவு இசைவுக்கு இருந்த வெள்ளியாக இருந்த கட்டணம் இப்போது 240 வெள்ளியாக்கப்பட்டுவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரும், ம. இ. கா. தலைவர்களில் ஒருவருமான திரு வ.கோவிந்தராசு என்பவர் உட்பட ... அக் கட்சியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்டுவிட்டனர். அக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான 'டத்தோ சாமிவேலு' என்பவர் இந்த அடக்குமுறை ஆணைகளை பிறப்பித்திருக்கிறார்.

படிப்படியாகத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை இழந்துவரும் சூழ்நிலைக்கு, இக் கட்சியே மலேசியத் தமிழர்களின் உரிமைகளை இழப்பதற்கு காரணியமாக உள்ளது என இங்கு கணிக்கப்படுகிறது. 37 ஆண்டாக இயங்கிவரும், அனைத்திந்தியப் பேராயக்கட்சியைப் போன்று பெயர் வைத்துக்கொண்டு இயங்கும் இக் கட்சி, பல துறைகளில் பறிபோகும் உரிமைகளைக் கண்டு பாராமுகமாக இயங்கிவருகிறது எனக் குற்றச்சாட்டுகளையும் இக்கட்சியும், தலைவர்களும் பொருட்படுத்துவதில்லை. தமிழர்களின் நாடற்ற சிக்கல், குடியுரிமை வழங்காமை, வீடு-நிலவுடைமைச்சலுகை, வேலைவாய்ப்பு, பொருளியல் சமநிலை, அரசியல்வுரிமை, தமிழ்மொழி, தாய்மொழிக் கல்வி ஆகியவற்றில் கோட்டை விட்டுவிட்டது.

144 உறுப்பினர்களடங்கிய நாட்டின் நாடாளுமன்றத்தில் இக் கட்சியில் 4 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். பத்துப்பேராவது 12 இலக்கம் இந்தியர் சார்பில் கிடைக்கத்தக்க உரிமையை இழந்துவிட்ட இக்கட்சி தமிழர்களை எதிரொலிப்பதில்லை. தொண்ணூறு விழுக்காடு தமிழர் உறுப்பியமுள்ள இக்கட்சி பல தோல்விகளையும், ஏமாற்றங்களையும் இழந்து ஒருசிலர் கோடிச் செல்வர்களாக ஆகிவருகின்றனர். பல தமிழர்கள் கடந்த 40 ஆண்டாக நாடுகடத்தப்பட்டுத் தமிழகத்தில் நாடற்றுப் போயிருக்கிறார்கள். இவர்கள் ஐந்து இலக்கமாகும். அண்மையில் சென்னையில் நடந்த இலங்கை மலையகத்தமிழர்காப்பு மாநாடும், புதுடில்லியில் நடந்த அணிசேராத உச்சிமாநாட்டுமுடிவும் புதிய சிந்தனைகளையும் எழுப்பி, இனிய எண்ணங்களை உண்டாக்கியிருக்கின்றன.

31-8-1957-இல் மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் விடுதலை வழங்கிவிட்டுச் சென்ற ஆங்கில ஆட்சி, பல சிக்கல்களை உண்டாக்கிவிட்டுச் சென்றுவிட்டது. உலகப்பொதுநல (காமன்வெல்த்து) நாடுகள் மக்களின் குடியுரிமை, வாழ்வுரிமை, அரசியல் தேசியப் பொறுப்புரிமைகளை இழக்கச்செய்தது. சிறுபான்மையினப் பாதுகாப்புக்கு அரசியலமைப்பில் பல பாதுகாப்புகளைச்செய்ய மறுத்துளது இந்திய நடுவணரசும் மூன்று மாதமாக பலஇலக்க மக்களான தமிழர் சிக்கல்களுக்குத் தீர்வு காணவில்லை. வெளியுறவுக் கொள்கையின் இச் சிக்கலில் அது பாராமுகமாக இருப்பது; தாயற்ற பிள்ளைகளைப் போல் கைவிடப்பட்டுக் கைகழுவப்பட்டிருக்கின்றனர். எனவே, இந்திய நடுவணரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசும், கட்சிகளும் உடனே பொறுப்பான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சக்கரியா ஆணைக்குழுவை விரைந்து வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும்.

— மலையமான்.

புலியாய் மாறு!

எத்தனை எழுதியும் பேசியும் இன்னும்
எதுவும் ஆகலே!
எல்லாம் இருந்த படியே யிருக்கு
எதுவும் போகலே!

அத்தனைப் பேரும் நல்லவ ராக
ஆக முடியலே!
அன்பும் பண்பும் எதையும் எடுத்துச்
செய்ய முடியலே!

நூற்றுக்கு நூறு பொய்யே யன்றி
உண்மை தேறலே!
நூலில் லாமலே கயிறு திரிக்கிற
நிலைமை மாறலே!

நாற்றுக்குத் தண்ணீர் இல்லாமல் காயுது;
நம் வயிறும் காயுது!
நாளும் நாளும் வயிறு காய்ந்து
உயிர்கள் மாயுது!

எங்கோ விழலுக்குப் பாயுது தண்ணீர்,
எனநாம் எண்ணியே
எதையோ பண்ணிப் பண்ணிக் கண்ணில்
வந்தது கண்ணீரே!

இங்கே விழலுக்கும் பாயுது தண்ணீர்
இதனையும் எண்ணியே.
இயல்பாய் வந்து விழும்விழும் என்றே
வைக்கிறோம் கண்ணியே!

ஆளு மாறுது வீடு மாறலே
எல்லாம் பிழைப்புதான்!
அதற்குள் அப்படி இப்படி என்பது
வெறும் சலப்புதான்!

தோளு மாறலே சுமைகள் குறையலே
தொல்லையோ, தொல்லை!
தோட்டக் காரனை அடித்துப் பறிக்கிறான்
விளைவித்த நெல்லை!

வலியவ னுக்கே வந்து சேருது
வளமொடு வாழ்வே!
வயலே வாழ்வாய் உழைப்பவ னுக்கோ
உழன்றிடும் தாழ்வே!

எலிகள் பூனைக்கு மணியைக் கட்டப்
போவதும் ஏது? ..
என்றே எண்ணி இருப்பவர் வியக்க
புலியாக மாறு!

கொடுமுடி,பாவலர்— க. அ. ஒளியவன்.

சமற்கிருதத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாதவன் தான் அதை எதிர்க்கிறுனும்!

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இராம.வீரப்பன்களின் முல்லைமாறித்தனப்பேச்சு!

தமிழினத்தைப் படுகுழிக்குள் தள்ளிவிட்டு. மேலோட்டமாகச் சீர்திருத்தம் பேசும் பார்ப்பனர்கள் தமக்கிருக்கும் ஆளுமையால், உலகின் மூத்த மொழியான, முதன்மொழியான தமிழ்மொழியை மண்ணுக்குள் புதைத்துவிட்டுப் புதைந்துகிடக்கும் சமற்கிருதத்தை மெருகுபூசி உலகுக்குக்காட்டி, உலக முதன் மொழியாகக் காட்டும் நிலை—உண்மைத் தமிழன் ஒவ்வொருவனும் உணர்ந்து அழுது புலம்பி எழுந்து போராடவேண்டியநிலை! இஃதிவ்வாறு இருக்க, இராம வீரப்பன் சமற்கிருதத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள்தாம் அதை எதிர்க்கிறுர்கள் எனக் கதைத்திருப்பது—அவர் சார்ந்த தமிழின—சூத்திர இனத்தின்—அழிவுக்கு மேலும் வலிவு கொடுக்குமே ஒழிய, அவரைத்தனிப்பட்ட முறையில் தேவாளாக்கிவிடாது

இம்மாதம் 4-ஆம் பக்கல் திருச்சி ஸ்ரீஇரங்நாத பாதுக வித்யாலயா' — கல்லூரி நாளில் மாண்புமிகு அமைச்சர். இராம வீரப்பன் கலந்துகொண்டு, சமற்கிருதத்தின் உயர்வைப்பற்றி நெடுநேரம் பேசிப் பார்ப்பனர்களின் மகிழ்ச்சியைப் பெற்றுப் பார்ப்பன அடிமையாய், பார்ப்பனீயக் கால்பிடியாய் மாறியுள்ளதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளார்!

அவர் பேசிய பேச்சின் சுருக்கம்: (5-4-83-ஆம் நாள் 'இந்து' இதழில் வெளிவந்தது)

'சமற்கிருதத்தின் ஆளுமையால் தமிழ் அழிவுக்குள்ளாகும் என மொழிப்பாதுகாவலர்கள் கூறும் கூற்றை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர்கள், தாங்கள்மட்டும் அம்மொழியை வெறுக்காமல், படிக்க விருப்பமுள்ள பலரின் எண்ணக் கதவுகளையும் தாழிடுகின்றனர்.

வேதமொழியான சமற்கிருதத்தின் நாகரிகத்தையும் உயிராற்றலையும் கொண்ட கொள்கைகளை அவர்களால் இதுநாள்வரை எதிர்க்க இயலவில்லை.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் சமற்கிருதத்தில் ஓர் இம்மியும் தெரியாத நிலையிலேயே நான் அதை எதிர்த்துக் கொண்டிருந்தேன்! ஒரு துறையைப்பற்றி ஒன்றுமே தெரியாத நிலையில் அதை எதிர்ப்பது அந்தக் காலத்தில் நாகரிகமாக இருந்தது. நான் இப்பொழுதுவரை 'மநு' என்பான் ஒரு பார்ப்பனன் ஆகையால்தான் தமிழகத்தில் ஒருபகுதியினர் 'மநு'வையும், 'மநு' தரும நூலையும் எதிர்க்கின்றனர் என்று நினைத்திருந்தேன்; ஆனுல் உண்மையில் 'மநு' ஒரு 'ஷத்திரியன்', அதுமட்டுமல்லாமல் 'மநுநீதி' என்றுமே எங்கும் திணிக்கப்பட்டதுமில்லை.

பெரும்பாலான வேற்றுமொழியினர் தங்களுக்கு மக்களிடம் இருக்கும் சாய்காலை நிலைநாட்டவே சமற்கிருகத்தை வெறுக்கின்றனர்; அதைப் படிக்க வேண்டாம் என்றும் கூறுகின்றனர்—இதே நிலைதான் இந்தி மொழிக்கும் இருக்கிறது.

வெளிநாட்டிலிருந்து சுற்றுலாவினராக வரும் பலர் சமற்கிருகத்தில் இருக்கும் கலை, நாகரிகம், அதன் பழமைச் சிறப்பைத் தெரிந்துகொள்ள வருகிற பொழுது, இங்குள்ள, தாய்நாட்டு மக்கள், ஆங்கிலத்தின் மீது ஆருக் காதல் வைத்திருப்பது வேடிக்கையானது'.

இங்ஙனம் சமற்கிருதம் ஏதோ தம் தாய்மொழி போல், எண்ணி ஆரவாரிக்கும் வீரப்பன்—அவ்வினத்தைப்பற்றி மேலும் கூறியதாவது:

'இந்த 'வித்யாலயா'விலிருந்து தேர்ச்சியடையும் ஒவ்வொருவருக்கும் உரு. 3000 அல்லது உரு. 5000 அன்பளிப்பாகத் தரப்பெறும்; ஏனென்ருல் இந்த 'வித்யாலயாவில்' வந்துசேர்ந்து படிக்க விரும்புவோர் எண்ணிக்கை மிகமிக குறைவு! இதே நிலைதான் ஆகம, சமற்கிருத பாடசாலைகளிலும், கோயில் அறக்கட்டளை நடத்தும் பள்ளிகளிலும் நடக்கின்றது!

இந்தப் பள்ளிகள் அனைத்து வகுப்பினர்க்கும் இடமளிக்காமல் இருப்பதில்லையே?—இப்படிப்பட்ட நிலைகளே இருக்குமாயின் அடுத்த பத்தாண்டுகளில் தகுதியான 'அர்ச்சகர்களும்', 'புரோகிதர்களும்' கிடைப்பது அரிதாகிவிடும். (கிடைக்காமற்போனுல் இவருக்கென்ன? குடிமுழுகிப் போய்விடுமா?)

இந்து மதத்திற்கும், இந்து மதக்கோட்பாடுகளுக்கும் எதிர்ப்பானவர்கள் மதத்திற்கும், கடவுளுக்கும் இழைக்கும் கொடுமைகளை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்து மதம் வளமையான நாகரிகப் பண்பாட்டை, வழிமுறையை, அறிவியல் அடிப்படையில் கொண்டது என்பதை விளக்கவே ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் அவர்கள் சென்னையில் கலைவிழாவைக் கூட்டினுர்கள். (என்ன அறிவியலோ?) இன்றுள்ள வெளிநாட்டு அறிஞர்கள் என்ன என்ன கண்டுபிடிக்கிறுர்களோ, அவையாவும் முன்பாகவே இந்து மதத்தில். இந்துமத முனிவர்களால் கண்டுகொள்ளப் பெற்றுள்ளன.

இன்று சில பிரிவினரால் பார்ப்பனர்கள் தமிழர்களுக்கு எதிர்ப்பானவர்கள் என்று கூறப்பெறுகிறது. ஆனுல் அஃது உண்மையன்று. எத்தனையோ கற்றறிந்த பார்ப்பன அறிஞர்கள் தமிழைப் புகழ்ந்துள்ளனர். சுப்பிரமணிய பாரதி, வி.வி. எசு. ஐயர், உ.வே. சாமிநாத ஐயர் ஆகியோர் பார்ப்பனர்களாக இருந்த பொழுதிலும் அவர்கள் தமிழுக்குத் தந்த கொடை அந்த இலக்கியங்கள் ஈடு இணையற்றவை''.

என்றுகூறி, திரு. வீரப்பனுர் தாம் சரியான ஓர் ஆரிய அடிமை என்பதை மெய்ப்பித்திருக்கிறுர். O

பெருஞ்சித்திரனுரைப் பற்றியும் தனித்தமிழ் பற்றியும் வீரமணி அவர்களின் கருத்துரை!

கேள்வி : பெருஞ்சித்திரனுரைப்பற்றித் தங்கள் கருத்து...?

வீரமணி அவர்கள் அளித்த விடை : சிறிய சிந்தனையாளர். தனித்தமிழ் இயக்கத்தில் இன்று மிகவும் தெளிவாக இருப்பவர். தமிழின உணர்வும், இனமானம், தன்மானம். மேலாண்மை எதிர்ப்பு இவற்றில் எடுத்துக்காட்டாகவும் தெளிவாகவும் இருக்கிறுர். அவர்மீதுஎனக்கு மிகுதியான அன்பும் மதிப்பும் உண்டு

கேள்வி : உங்கள் இதழில் ஏன் தனித்தமிழைப் பயன்படுத்துவது இல்லை?

விடை : எங்கள் இதழைப் படிக்கும் மக்கள் பலதரப்பட்டவர்கள். எழுத்தறிவே இல்லாமல் சிறிது எழுத்துக்கூட்டிப் படிப்பவர்கள். திராவிடர் கழகத்தில் படித்தவர்களைவிட படிக்காத பொதுமக்கள் மிகுதியாக உள்ளனர். அவர்களுக்கு மொழியுணர்வை அடிப்படையாக வைக்காமல் கருத்தினை முன்னுல் வைத்து நடத்தவேண்டும் என்பது ஐயாவின் குறிக்கோள். அவர் அதுபோல் நடத்தியதால் எங்களால் மாறமுடியவில்லை.

கேள்வி : மொழிமீட்சில்லாமல் இனமீட்சி வருமா?

விடை : இனமீட்சி வரும். முதலில் கருத்துகளைப் புரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக என்னைப் பொறுத்தவரை என்பேச்சு, கல்லூரி, நகரம், சிற்றூர் போன்ற இடங்களில் உள்ள மக்களுக்குத் தகுந்தவாறு மாற்றிப் பேசுகிறேன். கருத்தைக் கொடுப்பது, எதுவானுலும், மொழி எனும் கருவியின் மூலம் எப்படியாவது பயன் ஏற்படச்செய்யத்தான் நினைக்கிறோம் படிப்படியாகத்தான் தனித்தமிழைப் பயன்படுத்துவோம்.

— விடுதலை. 22-3-83.

இலண்டன், தமிழர் முன்னேற்றக் கழகம் வெளியிடும்

திரு.வி.க. நூற்றுண்டு விழாச் சிறப்பு மலர்!

எதிர்வரும் 27-8-1983 அன்று இலண்டனில் தமிழர் முன்னேற்றக் கழகம், தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனுரின் நூற்றுண்டு விழாவினைத் தக்கவாறு முத்தமிழ் முழக்கத்தோடும், சடுகுடு முதலிய விளையாட்டுப் போட்டிகளுடனும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்துவருகிறது. இவ்விழாவின் தொடர்பாக ஒரு சிறப்பு மலரையும் வெளிக்கொணரத் திட்டமிட்டுள்ளது.

மேற்கண்ட சிறப்பு மலரில் இடம்பெறவென, திரு. வி.க.வின் (தமிழ் இலக்கியத் தொண்டு, தாளிகைத் துறை வளர்ச்சி, பெண் கல்வி, பெண் முன்னேற்றம், தொழிற்கழகப் பணி முதலிய) பல துறைத் தொண்டுகள் தொடர்பான சிறப்புச் செய்திகள், பாக்கள், நாடகம், கதை, கட்டுரை முதலியவற்றை அன்பு கூர்ந்து விரைவில் நமக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்களன்புள்ள, அரங்க முருகையன.

பொறுப்பாளர், சிறப்புமலர் வெளியீட்டுத்துறை,
திரு.வி.க. நூற்றுண்டுவிழக்குழு.
164-Browning Road, London, E-12.

விற்பனைக்கு அணியம்!

பாவலரேறு பெருஞ்சித்திரனுரின் அரிய நூல்களை அஞ்சலில் பெற அன்பர்கள் எழுதி கேட்க!

1. கொய்யாக்கனி (பாவியம்) — 9-50
2. தன்னுணர்வு (அரியகட்டுரை) — 1-50
3. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள். — 2-25
4. உலகியல் நூறு — 6-50

பிறவெளியீடு :

இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும் (மலிவுப்பதிப்பு) — 1-00

(கு. ச. ஆனந்தன்.) (சிறப்புப் பதிப்பு) — 1-50

பிற விளக்கங்கட்கு : அமைச்சர் — 'தென்மொழி' — சென்னை-5.

மயக்கவெறி மருந்துக்கு அடிமையாகும் இளைஞர்கள்!

2.4 கோடி தாலர் மதிப்புள்ள 'கொக்கேன்' என்னும் மயக்கவெறி மருந்தைக் கடத்த முயன்ற குற்றத்திற்காக. சான் டேலோரியான் என்னும் விளம்பரம் பெற்ற அமெரிக்க தானியங்கி (ஆட்டோமொபைல்) வணிகர், கலிபோர்னியாவில், தளை செய்யப் பெற்றுள்ளார். அவர்மீது நடைபெறும் வழக்கு, பரபரப்பூட்டும் செய்தியாகச் செய்தியிதழ்களில் வந்துள்ளது. அமெரிக்காவில் மயக்கவெறி மருந்துகளுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது என்பதையே இது காட்டுகிறது.

'எராயின்' என்னும் மிகக் கொடிய மயக்கவெறிப் பொருளுக்கு ஏறத்தாழ 6 இலக்கம் அமெரிக்கர்கள் அடிமையாகியுள்ளனர் என்று நியூயார்க்கு ஆளுநரின் திறலாளர் குழு அண்மையில் அறிவித்துள்ளது. 'மரியுவாஞ' மற்றும் 'கொக்கேன்' என்னும் மயக்கவெறிப் பொருள்களை, 4.5 கோடி அமெரிக்கர்கள் முறையாகவோ அல்லது அவ்வப்போதோ அருந்துகின்றனர். 12 முதல் 17 அகவையுள்ள 40 இலக்கம் அமெரிக்க இளைஞர்கள் 'மரியுவாஞ'வை மாதம் ஒரு முறையாவது அருந்துகின்றனர் என்று அண்மைக்கால புள்ளி விளத்தங்கள் கூறுகின்றன.

மயக்கவெறி மருந்துகள் மற்றும் மதுக்குடிப்பு நஞ்சினுல் மடியும் 15-24 அகவையுள்ள இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகி வருகிறது என்று அமெரிக்க மருத்துவத் துறை அறிஞரின் அண்மைக்கால அறிக்கை கூறுகிறது.

20 அகவை முதல் 30 அகவை வரையுள்ள மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், கட்டிடக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் முதலியோர் கொக்கேனின் அடிமைகளாக உள்ளனர் என்று 'யு. எசு' செய்தி உலக அறிக்கை என்னும் இதழிகை சென்ற ஆண்டில் எழுதியுள்ளது. அமெரிக்க உயர்கல்வி நிலையங்களில் மயக்கவெறிப் பொருளுக்கு அடிமையான மாணவர்களின் எண்ணிக்கை 16.5 விழுக்காடாக உயர்ந்து உள்ளது என்று அது குறிப்பிட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில், மயக்கவெறிப் பொருள்களுக்கு இளைஞர்கள் அடிமையாகும் பழக்கம் இவ்வளவு பரவலாக இருப்பதே இதற்குக் காரணம், தங்கள் மீது திணிக்கப்படும் முதலாளியப் பண்பாட்டின் மீது அவர்களுக்கு நம்பிக்கையில்லை, குமுகாயத்திற்குத் தாங்கள் பயனற்றவர்கள் என்ற எண்ணமும், எதிர்காலத்தைப்பற்றிய அச்சமும், அவர்களை வாட்டுகின்றன; எனவே அவர்கள் மயக்கவெறிப் பொருள்களை நாடுகின்றனர்.

மயக்கவெறிப் பொருளுக்கு அடிமையாதல் என்பது, தொற்றுநோயைப் போல் அமெரிக்கக் குமுகாயத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது; கறுப்பர்கள் வாழும் பகுதிகளிலிருந்து, செல்வர்கள் வாழும் அழகு மாளிகைகள்வரை பரவியுள்ளது. மயக்கவெறிப் பொருள்களுக்காக ஆண்டுதோறும் 1000 கோடி தாலர்கள், அமெரிக்காவில் செலவிடப்படுகின்றன. இந்தக் கொடிய பழக்கத்தை எதிர்த்துப் போராட, அமெரிக்க அரசு செய்யும் முயற்சிகளும், செலவிடும் பணமும் மிகக் குறைவு என்று அமெரிக்க மக்கள் கருதுகின்றனர்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் உலகம் உளவரை உலவுமே!

(புலவர். ப. எழில்வாணன், க.மு.,)

ஊர்தொறும் வாழும் தனித்தனித் தமிழரை
ஒன்றெனக் கூட்டும் கழகமாம்;—பெருங்
குன்றென நிற்கும் கழகமாம்!

நாள்தொறும் தமிழர் நிலையினை விளக்கியே
நன்மையை ஆக்கும் இயக்கமாம்;—உளப்
புன்மையைப் போக்கும் இயக்கமாம்!

நற்றமிழ் வாணரை வாழவே வைத்திடும்
நல்வழி விளக்கும் அணியிதாம்;—இங்கு
அல்வழி ஒழிக்கத் துணியுமாம்!

கற்றவர் ஆயினும் களங்கம் செய்திடின்
கண்டனக் குரலை எழுப்புமாம்;—துயர்
வென்றிடும் திறனை வளர்க்குமாம்!

உலகம் முழுதும் உயர்தமிழ் முழங்கி
ஒய்தல் இன்றி உழைக்குமாம்;—உயிர்
சாய்தல் நீக்கி நிலைக்குமாம்!

அலையும் கடலோ(டு) அகன்ற வானும்
அழியினும் தமிழினைக் காக்குமாம்;—தன்
துளியுயிர் உளவரை போற்றுமாம்!

வெற்றுரை பேசிடும் வீணரைக் கண்டு
விலாவும் புடைக்க நகைக்குமாம்;—தமிழ்
அவாவும் நண்பரை அணைக்குமாம்!

நற்றிணை குறுந்தொகை திருக்குறள் அறிந்த
நல்லவர் திறனை மதிக்குமாம்;—மொழிக்
கொள்ளையர் செயலை ஒழிக்குமாம்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
உலகம் உளவரை உலவுமே;—தமிழ்க்
கலையின் உணர்வொடு மலருமே!

வளரத் தமிழினம் எந்நாளும் வளரும்;
வாழ்த்தி அதனால் காப்பமே;—நமை
வீழ்த்தும் பகையை மாய்ப்பமே!

'தமிழர்கள் இந்தி படிக்கவேண்டும் என்ற கருத்து நமக்கில்லை' தவத்திரு. குன்றக்குடி அடிகளார் மறுப்புரை!

குன்றக்குடி
31-3-83

அன்பிற் சிறந்த நமது திருமிகு. பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

நாம் தமிழ்நாட்டில், தமிழ்மக்கள் இந்தி படிக்கவேண்டும் என்று கூறியதாகவும், தமிழ்மொழிக்கு ஆதரவாக இல்லை யென்றும் தாங்கள் "தமிழ்நிலம்' இதழில் வெளியிட்டுள்ளதாகக் கேள்விப்பட்டோம். இது மிகுந்த வருத்தம் தந்துள்ளது. நம்மைப் பொறுத்தவரையில் அப்படியொரு கருத்து இல்லை.

நம்மோடு தாங்கள் நீண்டகாலப் பழக்கம் உடையவர்கள். நம்மைப்பற்றி அப்படியொரு கருத்து, தங்களுக்கு ஏற்பட்டிருந்தாலும் நமக்கு எழுதிக் கருத்துக் கேட்டிருக்கலாம். அதன் பின் தாங்கள் ஒரு முடிவெடுத்து எழுதியிருக்கலாம். பழகிய கேண்மையால் குறைகளை நிறைவுசெய்து கொண்டிருக்கலாம். தங்களுக்கு இவ்வகையான முயற்சிக்குத் தடையாக இருந்தது என்ன என்று நமக்குப் புலப்படவில்லை.

தமிழ் வளர்ச்சியும் வாழ்வுமே நமது குறிக்கோள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மற்றவை தங்கள் கடிதம் கண்டு

என்றும் வேண்டும் இன்ப அன்பு — அடிகளார்.

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் **காரி, ஞாயிறு** ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறுகேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன் கூட்டி இசைவு பெற்று' வரவும்.

— அமைச்சர்.

தமிழ்நிலம் -ஒரு மதிப்பீடு!

பேரன்புடைய, பெருமதிப்பிற்குரிய தலைவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வணக்கம் பல. தங்களின் இதழ் எண் 15, நாள் 3-4-83 தமிழ்நிலம் படித்து மிகவும் நெஞ்சம் உருகி ஆற்றொணாத் துயர் அடைந்தேன்.

'தமிழ்நிலம்' வழி மாதம் இழப்பு உரு 4500/- என்பது ஈடு கொடுக்கமுடியாத இழப்பாகும். பல செய்திகளையும் இழப்பு ஏற்படுகின்ற நிலையினையும் ஒளிவு மறைவு இன்றி எடுத்துக்காட்டியுள்ளீர்கள். தமிழ் அன்பர்கள், மற்றும் முகவர்கள் நல்ல ஒத்துழைப்பு நல்கவில்லை. மேலும் உறுதுணையாக இல்லா விட்டாலும் தடையாக உள்ளதை எடுத்துக்காட்டிய பாங்கு நெஞ்சை நெகிழவைக்கிறது.

தந்தை பெரியார் அவர்கள் அக்காலத்தில் செய்தித்தாள் நடத்துவதற்கு என்ன தொல்லைகள், பொருள் இழப்பு ஏற்று இருப்பார்கள் என்பதனை எண்ணிப்பார்க்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. நான் பாவலர் மணிவேலன் அவர்களிடம் (தலைவர் மாவட்ட உ. த. மு. க.) கூறி நிலுவையில்லாமல் 'தமிழ்நிலம்' நாள்காட்டிப் பணம் அனுப்ப நாளையே ஏற்பாடுசெய்கிறேன். தாங்கள் தருமபுரி மாவட்டம் சுற்றுச் செலவு மேற்கொள்ள வேண்டுகிறேன்.

இதழ்பற்றிய சில செய்திகளைஎழுதவிழைகிறேன்.

1. சேலம் உருக்காலைக் குடியிருப்பு பற்றியும், பார்ப்பனர் கொட்டம், தமிழ்ப் புறக்கணிப்பது பற்றியும் எழுதியது நன்றாக உள்ளது.

2. திரு. நெல்லை செபமணி அவர்களுக்குத் தருந்த விடை அகச்சான்று புறச்சான்றுகளுடன் எழுதியது மிகமிக நன்றாக உள்ளது.

3. 'பார்ப்பனர்கள் திருந்தாவிட்டால் அவர்களைத் திட்ட, வெறுக்கத் தேவையில்லை'

மடல் 1-க்கு சோமனூர் ப. பத்மநாபன் அவர்கள் பார்ப்பனர்கள்பற்றிய கேள்விக்கு மிகமிக விளக்கமாக (6-3-83 ஆனந்தவிகடன் இதழ்) மற்றும் ஆனந்தவிகடன் 29-8-82 மற்றும் 3-10-82 அகச்சான்றுகளுடன் நல்லசாட்டையடி அடித்திருக்கிறார்கள். நல்ல விடை. நறுக்கான விடை! பார்ப்பனர்கள் திமிருக்கு ஒரு சாட்டையடியாகும்!

பார்ப்பனர்கள் அகத்தில் உள்ள கருப்பொருள் என்ன என்பது அவர்களின் உயிர்மூச்சினையே எடுத்துக்காட்டி நல்லவிடை தந்துள்ளார்கள். பார்ப்பனர்கள் எண்ணம் தமிழ்மொழிக்குக் கேடுசெய்வது, தமிழர்கள் இனத்தை ஒழிப்பது என்ற அடிப்படைக் கொள்கையினை நன்கு எழுதியுள்ளது பாராட்டக் கூடியது.

பார்ப்பனர்கள் எப்படி அனைத்துச் சாதிப்பிரிவினரும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற கொள்கைக்கு எதிர்ப்பாக உள்ளார்கள் என்று எடுத்துக்காட்டியது பாராட்டக்கூடியது. மிகவும் பெரிய நெஞ்சுடன் பார்ப்பனர்கள் சிலர் அதாவது வாஞ்சிநாதர், ஆனந்தீசுவரர், கீதா, பரிதிமால் கலைஞன் போன்றவர்களை பாராட்டியது பாராட்டக்கூடியதாகும்.

மடல் 5-க்கு விடைதரும்போது வணக்கத்திற்குரிய தந்தை பெரியார் அவர்களும் காந்தியாருக்கும் நடந்த உரையாடலை நினைவுகூர்ந்து விடை தந்த பாங்கு நன்றாக உள்ளது. தந்தை பெரியார் அவர்களை மனம்திறந்து தலைவர் தந்தை பெரியார் என்று எழுதியது கண்டு உள்ளம் உவகைக் கடலில் மிதக்கின்றது நன்றி, பாராட்டுகிறேன்.

தாங்கள் அருள் கூர்ந்து 'பார்ப்பனர்களும் தந்தை பெரியாரும்" என்று ஒரு நூல் எழுதினால்கூட நன்றாக இருக்கும்; தந்தை பெரியார் அவர்களின் கொள்கையில் எவ்வளவு பிடிப்போடு இருக்கிறீர்கள் என்பது கண்டு மகிழ்கிறேன். நான் பணக்காரனாக இருந்தால் உங்கள் கட்டுரைக்கு அன்பளிப்புக்கூட அளிப்பேன். ஏழை, என்செய்வேன்? பாராட்டுவது தவிர செய்வதறியேன்.

பொதுவாக, 'தமிழ்நிலம்' மிகமிக அருமையாக உள்ளது. பல்வேறு செய்திகளைத் தொகுத்து கலைக் களஞ்சியம்போல் வெளிவருவது பாராட்டுகிறேன். பொதுவுடைமைப் பேரறிஞர் காரல்மார்க்சு அவர்கள் உருவப்படம் வெளியிட்டுப் பாடலும் வெளியிட்டது தங்களின் பொதுவுடைமைக் கொள்கை பிடிப்பைக் காட்டுகின்றது. நான் விரும்புவது பொதுவுடைமை அன்று, பொதுவுரிமை! தந்தை பெரியார் கூற்றுப்படி முதலில் தேவை பொதுவுரிமை, பின்னர் தேவை பொதுவுடைமை என்பேன். அதில் ஐயம் இல்லை. பொதுவாக இந்தியப் பொதுவுடைமையில் மதச்சார்பும், மூடநம்பிக்கையும் உடையவர்கள் 100க்கு 70பேர் பார்ப்பனர்களை ஆதரிக்கின்றவர்கள்.

— வித்துவான். தே.வே. சந்தானம், க.இ;ஆ.ப.
தலைவர். அரூர்வட்ட இக்கியமன்றம், ஆரூர்

புதுவை தனித் தமிழ்க் கழகம் கொண்டாடிய பாவலரேறு அவர்களின் பொன்விழா!

புதுவை தனித் தமிழ்க் கழகம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பொன்விழா தனித்தமிழ் இலக்கியக் கருத்தரங்கை, தி.பி. 2014 மீனம் 12 (26-3-83) காரி (சனி) மாலை 6-30 மணிக்கு புதுச்சேரி வணிக அவையில் சிறப்பாகக் கொண்டாடியது.

விழாவிற்கு க. தமிழமல்லன் தலைமை யேற்க, முத்துசேரன் வரவேற்புரை வழங்கிட, பாப்பொழிவு நிகழ்ச்சி தொடங்கியது.

சீனு. தமிழ்மணி, வெற்றிவேந்தன், மன்றவாணன், அர. இராசாராமன் ஆகியோர் பாப்பொழிவில் பாவலரேறுவின் பெருமைகளை அரும்புகளாய் அழகு தமிழ் மாலைகளாய் ஆக்கி வைத்தனர். விழாத் தலைவர் பாவலரேறுவின் தமிழ்ப் பணிகளையும், பண்புகளையும் குறித்துப் பேசினர்.

பாவலரேறுவின் படைப்புகளில், தாமரைக்கோ அவர்கள் பொதுமைப் பாடல்களைப்பற்றி நுணுகி ஆய்ந்து நல்லாய்வுரை ஒன்றை அளித்திட்டார்.

அ. பசுபதி அவர்கள் நூறாசிரியம் என்ற நூலை ஆய்ந்து அதில் காணப்படும் இலக்கண, இலக்கியச் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

சீனு. அரிமாப்பாண்டியன், இந்தி எதிர்ப்புப் பாடல்கள் என்ற தலைப்பில் அவையோர்க்கு உணர்ச்சியை ஊட்டும் வகையில், பெரியாரின் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களைப் பற்றியும், பாவலரேறுவின் இந்தி எதிர்ப்புப் பாடல்களைப் பாடியும், சிறைசென்ற காட்சிகளைக் காட்டியும், பாவேந்தருடன் ஒப்பிட்டும் அரிய உரை ஒன்றை ஆற்றினார்.

தி. நா. அறிவுஒளி அவர்கள், 'ஐயை' யின் கதையைக் காட்டி, அது விளைந்திட்ட இடம் சிறை என்பதைச் சுட்டி, அதில் இழைந்தோடும் இலக்கியத் திறன், காட்டுகள் கையாண்டுள்ள எளிய முறை அனைத்தையும் அழகுற எடுத்துக் கூறினார்.

இறுதியாக வே. ஆறுமுகம் நன்றிகூற விழா 9-30 மணிக்கு இனிது நிறைவுற்றது

பாவலரேறுவின் பொன்விழா, இலக்கியக் கருத்தரங்கிற்கு வருகை தந்தோர் இறுதிவரை அவை நிறைத்திருந்த காட்சி விழாவின் மாட்சியே, என்றுரைக்கும் வண்ணம் விழா இனிது நடைபெற்றது என்று, புதுச்சேரி தனித் தமிழ்க் கழகச் செயலாளர் திரு. சீனு. அரிமாப் பாண்டியன் தெரிவிக்கிறார்.

தமிழ்நாளிகை-ஓர் அரிய வாய்ப்பு!

நாள் கடந்துவிட்டமையால் எஞ்சியுள்ள குறைந்த படிகளையும் அன்பர்கள் பெறும் நலன் கருதி குறைந்த விலையில் விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தேவைப்படுவோர் விரைந்து தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தனிப்படி ஒன்று	— உரு. 3.00
அஞ்சல் செலவோடு தனிநாளிகை ஒன்று	— உரு. 5.00

10-படிகள் வேண்டுவோர்
—உரு. 40.00 மட்டும் அனுப்பினால் போதுமானது!

அரிய வாய்ப்பை நழுவவிடாதீர்!

— அமைச்சர்.

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலாளிகள் செய்கிறார்கள் என்று சொன்னால், எத்தனைக் கோடி உருவாவை இந்த நாட்டிலிருந்து சுரண்டி அவர்கள் இட்டிட்டிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்! இப்படிச் சிந்திக்க வேண்டும்! சும்மா, அமிதாப் பச்சனுக்கு இருக்கிற பெரிய விளம்பரத்தைப் பார்த்து மயங்கக் கூடாது! தனி ஓர் ஆள், கலைஞரின் தம்பி பல முதலாளிகள், அதில் ஒரு ஆள் நூறு கோடி உருவாவை முதலீடு செய்திருக்கிறார்கள், அப்படிச் செய்ய இந்த நாட்டிலே வாய்ப்பு இருக்கிறது. என்று சொன்னால், அவர்கள் எத்தனைக் கோடி உருவாவை இந்த நாட்டிலே இந்த மக்களிடம் சுரண்டி இட்டிட்டிருக்கிறார்கள் என்பதாகச் சிந்திக்க வேண்டும், அப்படிச் சிந்தித்தால் தான் நமக்கு உண்மை தெரியும்! அதே போல, காலையிலிருந்து மாலை வரை கட்டை பிளக்கிற ஒரு கூலி வெட்டி, கோடரியைத் தூக்கித் தூக்கி, உடம்பினுடைய எலும்புகள், தசைகள், நரம்புகள், நாடிகள் அத்தனையையும் அசைத்துப் பாடுபட்டால் அவனுக்கு ஐந்து உருவா, ஆறு உருவா கிடைக்கிறது அரிது! பத்து உருவா கிடைத்தால், அதுவே அவனுக்குப் பெரிய இன்ப வாழ்க்கை! ஒன்றுமேயில்லை... அப்படியே நோகாமல், அவர்கள் இழக்கிறது என்ன? எண்ணிப் பாருங்கள்! நடிகர்கள் நடிகைகள் இலக்கம் இலக்கமாக ஈட்டுகிறார்களே! இந்த பணமெல்லாம் எங்கே போய்க் குவிகிறது!

எதையாவது இழக்கிறார்களா? துன்பப்படுகிறார்களா? ஒன்றும் இழக்கவில்லை! இழக்கிறது என்று ஏதாவது சொல்ல வேண்டுமானால், அவர்கள் மேலிருக்கிற உடைகளையெல்லாம் கழற்றிக் கழற்றிப் போடுகிறார்களே அவைதான் அவர்கள் இழப்பது! அதுவும் அவர்கள் நடிக்கிற வரைக்கும்! அதைப் பார்த்து மக்கள் சுரண்டப்படுகிறார்கள்! இது கலைகள் என்ற பெயராலே ஒரு சுரண்டல்!

செய்தித் தாள்களை எடுத்துக் கொள்ளுங்கள்! நான்கு பக்கம், ஆறு பக்கம் போட்டு விடுகிறான்; ஒரு பக்கத்திலே எத்தனை விளம்பரம்? 'இந்து''வை எடுத்துக் கொள்ளுங்களேன்! அது தான் பெரிய சுரண்டல் இந்த நாட்டிலே! இந்து, தினமணி, சுதேசமித்திரன், இதுபோன்ற இதழ்களில் — என்னென்ன சுரண்டல்கள்! தினத்தந்தி, அவ்வளவு சுரண்டல்! அது தமிழன் நடத்தினால் என்ன? எவன் நடத்தினால் தான் என்ன! சுரண்டல் என்கிறது, யாரிடத்திலும் இருக்கக் கூடாது! நம்முடைய உடன் பிறப்பாகட்டும், நம்முடைய தம்பி ஆகட்டும், நம்முடைய அண்ணனாகட்டும், நம்மைச் சுரண்டினால் கூட அதுவும் சுரண்டல் தான்! நம்முடைய தந்தை நம்மை சுரண்டினாலும், சுரண்டல் தான்! மகன் சுரண்டினாலும் சுரண்டல் தான்! ஆணை, ஒரு பெண் சுரண்டினாலும் சுரண்டல் தான்! என்ன இது! சுரண்டலுக்கு என்ன, இலக்கணம் வகுக்க முடியுமா? யார் சுரண்டப்படுகிறார்களோ அவர்களைச் சுரண்டுகிறவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் நீங்கள் நினைத்துப்பார்க்க வேண்டும்!

இத்தனைச் சுரண்டல்கள் இருக்கின்றன! எனவே, நம்முடைய மதிப்புக்குரிய, அன்புக்குரிய, கலைஞர் அவர்கள் இவற்றையெல்லாம் சிந்திக்க வேண்டும்! அதுபோல நாம பணக்காரனை மட்டும் சிந்திக்கக் கூடாது!

திரைப்படங்களை முதலில் ஒழிக்க வேண்டும்! இல்லையென்றால், திரைப்படக் கொட்டகைகளை ஒழிக்க வேண்டும்! என்னத்திற்காக, இந்த நாட்டிலே திரைப்படம்? திரைப்படம் காட்டக் காட்ட மனம் அழிவதைத்தான் போகிறதே தவிர, அறிவு வளரவில்லை; மனம் வளரவில்லை; உரிமையும் அவர்களுக்குத் தெரியவில்லை. நாம எந்த நேரத்தில் எப்படி ஏமாற்றப்படுகிறோம் என்பதே தெரியவில்லை! சென்னையில் வாழ்கிறவர்கள், திரைப்படத்துக்காக நூறு உருவா தாளை எடுத்து, சீட்டு வாங்குவதற்கு ஒரு பையன் நீட்டுகிற பொழுது, சிற்றூர்ப் புறங்களில் பாருங்கள், ஓர் உருவாத் தாளை அவன் கூலி வாங்கிக்கொண்டு, மூன்று உருவா நான்கு ஐந்து உருவா மீறிப்போனால் பத்து உருவா கூலி அவனுக்கு, அந்த உருவாவை வாங்கி, பொன் போல எடுத்துக் கொண்டு போய், ஓர் உருவா இரண்டு உருவாவை மிகப் பொன் போலப் பேணி வைத்துத் தன்னுடைய குடும்பத்திலே ஒரு திருமணத்திற்கோ எதற்கோ அவன் முதலீடு செய்கிறானே, சேர்த்து வைக்கிறானே, அஃது எத்தனை யாண்டுகள் சேர்த்து வைத்தால் தன்னுடைய பிள்ளைகளுடைய திருமணத்தை முடிக்க முடியும்? தன் பையன் திருமணத்தை முடிக்க முடியும்? அல்லது ஒரு வீடு கட்ட முடியும் ஒரு நிலம் வாங்க முடியும் என்று பார்க்க வேண்டும். எவ்வளவு பெரிய அழிவுகள், இந்த நகரத்திலே நடக்கின்றன! இதெல்லாம் சுரண்டல் தானே! இதையெல்லாம் இட்டமிட்டு ஒழிக்க வேண்டும்! அதற்கு மேலே மதச் சுரண்டல்; அதற்கும் மேலே சாதிச் சுரண்டல்! என்னையா? அறிஞர்களெல்லாம் சாதியில் சேர்ந்திருக்கிறார்கள்! சாதிச் சங்கங்களின் தலைவர்கள்! ஐயா எப்படியோ எனக்குத் தெரியவில்லை! இங்கு இருக்கிறவர்கள் அப்படி இருந்தால் நான் வெளிப்படையாகவே சொல்லி விடுவேன்! நம்முடைய பெருமைக்குரிய தமிழ்த் தலைவர்கள் சிலர் சாதிச் சங்கங்களில் இருக்கிறார்கள்! ''திருக்குறள்'! என்று பெயர்! அவருக்கு ''அடை'' வேறு! திருக்குறளை நன்றாகப் பேசுகிறார் என்று சொல்லி, ''திருக்குறள் முனுசாமி'' அவரைத் தனிப்பட்ட முறையிலே சாடவில்லை! அவரும் நம் தமிழர் தாம்! இருந்தாலும் சாதியைக் கோடு போட்டு திருக்குறளை விடவா ஒரு பெருமையுடையது! ''முனிசாமி கவுண்டர்'' என்பது! என்னையா இது! ஏன்! திருக்குறள் படித்தும் சாதியை ஒழிக்க முடியவில்லையே! 'முனிசாமிப் படையாட்சி'' என்று போட்டுக் கொள்ளுகிறார்; ''முனிசாமிக் கவுண்டர்'' என்று போட்டுக் கொள்கிறாரே! எதற்கு? அதே போல நம்முடைய காவலர்களும் ஏவலர்களும் எல்லாம் சேர்ந்து போய் சாதிக்குத் தலைமை, மாநாட்டுக்குத் தலைமை! என்ன இந்த நாட்டிலே! உரிமை கொடுக்கிறான் என்கிறதற்காக, நாம் சாதியை அப்படியே வைத்திருக்கிறதா? சாதி இல்லாமலேயே உரிமை செய்யக் கேட்கிறது! சாதியைச் சொல்லி, உரிமையை நாம கேட்பதற்குச் சட்டம் இருந்தால், நமக்குச் சாதியில்லாமலேயே தமிழ் இனம் ஒட்டு மொத்தமாக உரிமை பெறக் கூடிய இனமே என்று நாம் எல்லாருமாகச் சேர்ந்து போராடுகிறது! அதற்கொரு முயற்சி செய்ய வேண்டாமா?

'' சலுகை போனால்
போகட்டும்—என்
அலுவல் போனால்
போகட்டும்!
தலைமுறை ஒரு கோடி
கண்ட—என்
தமிழ் விடுதலை
யாகட்டும்!''

—என்று சொன்னார் பாவேந்தர்! நம் தமிழினம் விடுதலை யாகட்டும் என்று சொல்லக் கூடாதா? எண்ணிப் பார்க்க வேண்டும்! எனவே தான், நாம அரசின் அடிப்படையான நிலைகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும்! தேர்தல் வந்தது, — பெரிய குளத்திலே! எத்தனைக் கோடி உருவா அங்கு போய் மிதந்தது! அந்தக் குளத்திலே! நமக்குத் தெரியும்! என்ன விளைவு? ஓர் ஆள் இங்கிருந்து அங்கே போனான்! என்னையா? ஓர் ஆள் போகிறதற்கு எல்லாச் செய்தித்தாள்களிலும் இதே செய்தி! எங்கே பார்த்தாலும் இதே பேச்சு! என்ன அரசியல் அப்படி இந்த நாட்டிலே முகாமையான பெரிய அறிவா அது! அரசியல் என்பது ஓர் ஏமாற்று! செய்தித் தாளிலே நமது உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில ''தமிழ நிலம்'! வெளியீட்டு விழா நடக்கிறது என்று ஒரு சிறிய விளம்பரம் கொடுத்தோம்! ஒரு ஏழு வரியோ, பத்து வரியோ! அதற்கு நூறு உருவா! எவ்வளவு பெரிய ''கிலுக்குப் படம்'' வருகிறதே! அதற்கு நூறு உருவாவா, காசா வாங்கிக் கொண்டு போடுகிறான்? எவ்வளவு இழிவு இந்த நாட்டிலே! அறிவு வளர்வதற்கு வாய்ப்பே யில்லையே! எல்லாம் அடைத்துப் போட்டுக் கொண்டு கிடக்கிறானே! எந்த இடத்தைப் பார்த்தாலும் உருவத்தைப் போட்டிருக்கிறானே! இந்த நிலைகளிலே நீங்களெல்லாம் சிந்திக்க வேண்டுமானால், ஏதாவது ஒட்டு மொத்தமான முயற்சி நடந்தாக வேண்டும். ஒட்டு மொத்தமாக முயற்சி நடந்தால் தான் நடக்கும்; தனித்தனி முயற்சியாக இருந்தால், நடக்கவே நடக்காது! எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், இந்த இனம் முன்னேறாது! நீங்கள் வேண்டுமானால் சிந்தித்துப் பாருங்கள்; எண்ணிப் பாருங்கள்; எது சரி என்று பாருங்கள் ஒட்டு மொத்தமான முயற்சி நடக்க வேண்டும்!

அதற்காக நூறு பேரும் வாருங்கள் என்று நான் சொல்லவில்லை! அவன் 'மூன்று பேர் என்று சொல்கிறோம்! மிக இழிவான தொகை அது! அதாவது மிக 'poor Minority'' என்று சொல்லுவானே, அது போல மிக மிகச் சிறுபான்மை இனம்! மிக மிக மிகச் சிறுபான்மையினம் நூற்றுக்கு மூன்று பேர் என்பது! தொண்ணூற்று ஏழு பேர் ஏமாறிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இது எதனால் என்று தெரியவில்லையா? இந்த இனத்திலே, நூற்றுக்கு மூன்று பேராக இருக்கிற அவர்களை வெல்லுவதற்கு, ஐந்து பேர் சேர்ந்தால் போதும்! ஐந்து பேர் கூடச் சேரவில்லை என்பது தான் பொருள் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக!

நூற்றுக்கு ஐந்து பேர் கூடச் சேரவில்லையே! சேர்ந்திருந்தக்கால் வென்றிருப்போமே! ஐந்து பேர் சேர்ந்தால் ஐந்து பேரும் ஐந்து கோணங்களிலே முகத்தைத் திருப்பிக் கொள்கிறோம்! இவருக்கென்ன இப்படி; இவருக்கென்ன இப்படி; என்று ஒருவர்க்கொருவர் கேட்டுக் கொள்கிறோம்! இந்த நிலைகளையெல்லாம் வைத்துக் கொண்டு, நாம முன்னேற முடியுமா? எனவே தான், அடிப்படையான அரசியல் ஊதியம்... இப்பொழுது, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் கூட ஏதாவது பணம், கிணம் வருவாய் இருக்கிறது என்று தெரிந்தால் நிறைய பேர் வருவார்கள்! போட்டி போட்டுக் கொள்வார்கள்! நினைத்துப் பார்க்க வேண்டும்! ஓர் இதழை நடத்துவது அவ்வளவு எளிதன்று! எப்படியாவது உருட்டி, புரட்டி, திரட்டி, கிரட்டி ஏதாவது ஒரு வழி செய்து நடத்தியாக வேண்டும்! கடமை! அந்த நிலையோடு வாருங்கள்! வேண்டுமானால், கூட வாருங்கள் உள்ளே வந்து பாருங்கள்! எங்கெங்கே என்னென்ன இடத்திலே என்னென்ன இருக்கிறது என்று தேடிப் பாருங்கள்! இந்த ஆராய்ச்சி வேறு எவனும் செய்ய மாட்டான்! பாப்பான்கூட செய்யமாட்டான்! இந்த ஆராய்ச்சியை? தமிழன் தான் செய்வான்! அவன் தான் ஆராய்ச்சி மேலே ஆராய்ச்சி பண்ணிப் பண்ணி, இந்த இனத்தையே கடைசியில் ஒன்றுமில்லாமல் பண்ணி, பூதக் கண்ணாடி வைத்து, ''தமிழன் எங்கே? தமிழன் எங்கே?'' என்று தேடும்படி ஆகிவிட்டது.

இவன் தமிழன் இல்லை என்று துணிந்து ஒரு தமிழன் பேசுகிறான்! வேறு யாரும் பேசவில்லை! நீங்கள் தமிழன் இல்லை என்று சொல்லி, தமிழன் பேசுகிறான்! என்ன இழிவான பெரிய ஒரு நிலை! வேறு யாராவது வட நாட்டுக்காரன் சொன்னானா? குசராத்திக்காரன் சொன்னானா? அல்லது வேறு ஒரு மராட்டியன் சொன்னானா! அவன் கூட திராவிட இனத்தவன் என்று விட்டுத் தொலைக்கலாமே! அல்லது ஒரு இந்திக்காரன் சொன்னானா, ''கருணாநிதி'? தமிழன் இல்லை'' என்று! அல்லது வேறே சீனத்திலிருந்து வந்து ஒருவன் சொன்னானா? அல்லது, ஜப்பானிலிருந்து ஓர் ஆராய்ச்சியாளன், வந்து, இவர் தமிழரில்லை என்று சொன்னான்! நாம் நினைக்கிறோம், முதல்வர் அவர்கள்கூட சொல்லவில்லை: அவரை நாம் தமிழர் என்று ஒப்புக் கொண்டாலும் சரி, ஒப்புக் கொள்ளவில்லையானாலும் சரி, அது அவரவருடைய விருப்பம்! ஏனென்றால், அந்த நிலையை வந்து நாம் முடிவு கட்ட முடியாது! ஆனால் குழந்தைவேலு, அவரை ஒரு தமிழன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்!

ஒரு தமிழனைப் பார்த்து ஒரு தமிழன் அப்படிச் சொல்லலாமா? அதாவது உடன் பிறந்த தம்பி அண்ணனைப் பார்த்துச் சொல்கிறான், ''நீ எங்கள் அப்பனுக்கு பிறந்தாயா? என்று. எப்படி இருக்கிறது, இந்த இழிவு! எப்படிப்பட்ட இழிவு நிலையில், அரசியல் என்ற பெயராலே நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம், சிந்தனைகளை இழக்கிறோம்! நலன்களுக்காக வேறு இடத்திலே போராடுகிறோம்! ''தமிழ் வாழ்க'' என்று சொல்கிறோம்! 'தமிழர்கள் வாழ்க' என்று சொல்கிறோம்! ''தமிழினம் வாழ்க!'' என்று சொல்கிறோம்! அது நடக்குமா? இப்படிப்பட்ட நிலையிலே நாம ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோமே!

கலைஞருக்குத் தெரியவில்லை! உடனே எண்ணிப் பார்த்து, ''நான் தமிழரா, இல்லையா என்று அவர் கேட்கிறார்! 'அவர், அவருடைய தந்தை யாருக்குத்தான் பிறந்தாரா? என்று திருப்பிக் கேட்டிருக்க வேண்டும், அல்லது யாரை யாவது விட்டுக் கேட்கச் சொல்லியிருக்க வேண்டும்! யாரும் சொல்ல முடியாது தானே! ஏதோ ஓர் எண்ணம்! பொறுக்கவில்லை! ஒரே இழிவாய்ப் போயிற்று! நாம் எதற்குச் சொல்கிறோம், இதற்குப் போய் ஒரு பெரிய, தலைவர், 'அண்ணா மேல் ஆணை, என்னுடைய தாய் தந்தையர்மேல் ஆணை, தமிழ் மேல் ஆணை, என்று போட்டு, அதற்காக நான் உயிரை விடுவேன், 'என்பதா? என்னத்திற்காக உயிரை விடுகிறாய்! ''உண்ணா நோன்பு இருப்பேன்!'' என்றால் கூட அதில் தப்பில்லை! ஒருமுறை, கோவையில், ஜி.டி. நாயுடுவும் நானும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தோம், இந்தி எதிர்ப்புக்கு நான் உயிரையும் கொடுப்பேன் என்று நம்முடைய தலைவர் ஒருவர் அன்றைக்கு (1952—இல்) நடந்த இந்தி எதிர்ப்பு நேரத்தில் பேசியிருந்தார்கள் படித்தவுடனே அந்த தாளைத் தூக்கி வீசி யெறிந்தார்! நீ எதற்கடா உன் உயிரைப் போக்கிக் கொள்கிறாய்! இன்னொருத்தன் உயிரை எடுப்பேன் எடுப்பேன் என்று சொல்லேன்! ''அதல்லவா ஆண்மை'' என்று சொன்னார்.

(வலுத்த கைதட்டல்)

தற்கொலை செய்து கொள்வது வீரமா? அல்லது மிகப் பெரிய ஈகமா? அல்லது பெருமையா? தமிழினத்துக்காக நான் உயிரைக் கொடுப்பேன் என்பது என்ன ஒரு தொண்டா? எதையாவது செய்து நான் சாவேன்? உயிரை என்னுடைய கையில் பிடித்துக் கொடுப்பேன் என்பது எவ்வளவு இழிவு! தவறு! என்னத்திற்காக உயிரைத் தருவது? இறுதி வரை உயிரைக் கொடுத்து உழைக்க வேண்டும்! அஃதாவது கடைசி வரைக்கும், முழு உயிரையும், உயிர்ப்பு ஆற்றலையும், உடல் ஆற்றலையும் அதற்கு ஈடுபடுத்த வேண்டும்! தேவையானால், மற்றவன் உயிரை எடுக்க வேண்டும்! தேவையானால்!... தேவை வந்தால்!... அந்த நிலைகளிலேதான் ஈடுபட வேண்டும்.

(தொடரும்.)

அன்பர்களுக்கு!

தமிழ்நிலம் தொடர்ந்து வெளிவர உறுப்பினர்களைத் திரட்டி, விற்பனையையும் கூட்டுங்கள்.